

# கலைப்பரிதி



தமிழ்க் கலாமன்றம்

புனித அந்தோனியார் கல்லூரி, கண்டி

1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# Jayanthi Textile

*Importers, Wholesalers & Commission Agents*

134, Keyzer Street,
Colombo - 11.

*Phone: 327937*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அந்தோனியார் கல்லூரி

## தமிழ்க் கலாமன்றம் அளிக்கும்

# கலைவிழா '94


சிறப்பு விருந்தினர்:-

வண. பிதா. ஸ்டீபன் ஏபிரகாம்

காலம்: 7-10-1994

நேரம்: பி. ப. 3.00 மணி

இடம்: கல்லூரி மண்டபம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# UNI LANKA MEDICAL

*Wholesale & Retail Dealers in Pharmaceuticals & Grocers*

45, Peradeniya Road,
Kandy.

Quality and Service is our Motto.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே.

ஏழ் கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே.

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

சூழ் கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே.

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே.

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# FAMILY FOOD CENTRE

No. 42, Nuwara Eliya Road,

Gampola.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம ன் ற   கீ த ம்

கலை விளக்கே! ஒளி விளக்கே!
கவின் விளக்கே வாழ்க!
கலாமன்றம் எனும் இனிய
தமிழ் விளக்கே நீ வாழ்க

இயல் வளர்ப்பாய் இசை வளர்ப்பாய்
நாடகமும் வளர்ப்பாய்
எல்லோரும் புகழ்ந்திடுவார்
வாழிய வாழியவே - கலை விளக்கே

கல்வியென்னும் அமுது வைத்தாய்
கருத்துடையார் மகிழ்ந்தார்
கவிதை எனும் சரம் கொடுத்தாய்
கலை அறிந்தோர் மகிழ்ந்தார் - கலை விளக்கே

தெய்வ மதன் பொருளுரைத்தாய்
தெளிந்தவர்கள் தொழுதார்
தேனனைய இசை பொழிந்தாய்
தெரிந்தவர்கள் மகிழ்ந்தார் - கலை விளக்கே

இயற்றியவர்:
**புலவர் - பார்வதிநாதசிவம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

# Jayes Trading Company

P. O. Box 293,
106, Bankshall Street,
Colombo - 11.

*Tele 436366, 28694, 434995, 422020, 430262*
*Telex: 21551 JAYES CE - CABLE: "JAYCHEM" COLOMBO*
*Fax: 94-1-449514*

*Exporters of*:
Cashew Kernels & Spices

*Importers of*:
Solvents, Fine Chemicals, Industrial Chemicals and Raw Materials.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் வாழ்த்துச் செய்தி

புனித அந்தோனியார் கல்லூரித் தமிழ்க்கலாமன்றம் அக்டோபர் மாதம் 7ம் திகதி தனது கலை விழாவினை நடாத்த இருப்பதாகக் கேள்விப்பட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.

உண்மையான தமிழ் அபிமானம் கொண்ட புனித அந்தோனியார் கல்லூரித் தமிழ் ஆசிரியர்களினாலும், பரந்த மனப்பான்மை கொண்ட புனித அந்தோனியார் கல்லூரி அதிபர்களினாலும் தமிழ்க்கலாமன்றம் மடந்தைப்பருவத்தை அடைந்துள்ளது. கடந்த காலத்தில் அது சாதித்தவை பல. இனிச்சாதிக்க விருப்பவை மிகப்பல.

எனது வசந்த காலத்தில் புனித அந்தோனியார் கல்லூரியுடனும் தமிழ் கலாமன்றத்துடனும் அதிக பொழுதினைச் செலவிட்டேன். இவை என்றுமே நான் மிகுந்த கரிசனையுடன் பாதுகாத்து வரும் பசுமையான நினைவுகள்.

இன்று தமிழ்க்கலாமன்றத்தினை நடாத்தி வரும் மாணவர்களுக்கும் ஆசிரியப்பெருமக்களுக்கும், அதிபர் வண. பிதா ஸ்டீபன் ஏபிரகாம் அவர்கட்கும் எனது இனிய வாழ்த்துதல்கள் உரித்தாகுக.

**அதி வண. கலாநிதி. எஸ். ஜெபநேசன்**
பேராயர், தென்னிந்தியத் திருச்சபை -
யாழ்ப்பாண ஆதீனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments of*

# Tough Kids

# '94' Maths

P. Kirubaharan

N. Ketheeswaran

P. Prabu Premkumar

R. Selvachandren

S. Suresh

G. Ramesh

L. Sharmilan

P. Ketheesparan

Y. Suthaharan

Y. Yugabalan

**Class Teacher:-** *Mrs. L. Ratnarajah*

# A/L—92

K. Sadeesh

S. Laxakumar

M. Kalaichelvan

G. Nimalan

S. Rajkumar

N. Nandakumar

S. M. Rizmy

M. M. S. M. Rizwan

P. Utharakumar

M. Azary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ST. ANTHONY'S COLLEGE,
KANDY.

# PRINCIPAL'S MESSAGE

*The Tamil Cultural Society will be celebrating this year the 25th Annual Kalai Villa in twenty seven years of its existence.*

*The celebrations of this Cultural Society are looked forward to eagerly by many a well-wisher because of the standards achieved. Standards have been kept up by an ever willing and capable coterie of Tamil teachers who have always responded positively to the demands made on them, whenever the school needed their services.*

*The genuine interest evinced by this Society which has brought together, without any exception all the Tamil speaking teachers, is due mainly to the efforts of our Sectional head, the ever smiling and generous Mrs. I. Sivaratnam. She has been a tower of strength to the entire Institution, and has enjoyed working for its development.*

*The Tamil Cultural Society is indeed privileged to be led by a group of enthusiastic teachers, which I am sure the students and their parents dutifully appreciate.*

*Whilst congratulating the Society on reaching this milestone of 25 years, I wish it all the success it deserves in this particular year's endeavour.*

*May the Cultural heritage of all our Sri Lankans flourish in all its richness in this fair land of ours*

Fr. Dom Stephen Abraham O. S. B.
Principal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# *ALLIED STEEL COMPANY*

**GENERAL HARDWARE MERCHANTS**

126, Barber Street,
(Maha Vidyalaya Mawatha,)
Colombo - 13.

*Tele: 324887*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய மாகாண கல்வி (தமிழ்) அமைச்சுப்பிரிவின் உதவி செயலாளர் திரு. எஸ். தேசோமயானந்தம் அவர்களின் ஆசிச்செய்தி

தமிழ் வாழ, தமிழ் வளர தமிழ் மன்றம் சமைத்து தமிழ்ப்பணி ஆற்றும் கண்டி புனித அந்தோனியார் கல்லூரி தமிழ்கலாமன்ற வெளியீடான ''கலைமதி'' சஞ்சிகைக்கு ஆசிச் செய்தியொன்றினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி யெய்துகிறேன்.

பாடசாலைகளில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களின் தமிழ்மொழித் திறன்களை விருத்தி செய்வது பெருங்கடனாகும். காலத்தின் தேவையொட்டி எமது காலத்திலும் தமிழ்மொழியை வளரச்செய்வதும் அதன் பழம்பெரும் பண்பாட்டினை எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்ளச் செய்வதும் தலையாய பணியாகும்.

மாணவர் மத்தியிலே தமிழின் வன்மையும் தொன்மையும் சிறக்க வழி செய்யப்பட வேண்டும். ''தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வழிசெய்யப்பட வேண்டும்'' என்பதற்கொப்ப வானமளந்ததனைத்தும் அளந்திடும் வண்மொழியை வாழ்விக்க தமிழ்பால் பற்றுதல்கொண்ட ஒவ்வொரு தமிழ் நெஞ்சமும் திடசங்கற்பம் பூணவேண்டும்.

இவ்வரும் பணியிலே மலையகத்தின் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாம் இக்கல்லூரி ஆற்றிவரும் பங்களிப்பு உதாரணத்துவமாக மிளிர்கிறது.

வாழ்க கலைவிழா
வளர்க கலைமதி!

**எஸ். தேசோமயானந்தம்**
உதவி செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

# ELITE TEXTILE

*Wholesale & Retail Dealers in Textile*

No. 60, 3rd Cross Street,
Colombo - 11.

*Phone: 323080, 332823*

# MAIYURA TEXTILES

*Wholesale & Retail Dealers in Textiles*

**149, Keyzer Street,**
**Colombo – 11**

*Phone: 324060*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்திய மாகாண கல்வி (முஸ்லிம்) அமைச்சு பிரிவின் உதவி செயலாளர் ஜனாப். எஸ். ஏ. ஆர். எம். பாரூக் அவர்கள் வழங்கிய ஆசியுரை**

மலையகத்தின் தலைசிறந்த கலைக்கூடங்களில் ஒன்றாம் கண்டி புனித அந்தோனியார் கல்லூரி தமிழ் கலா மன்ற வெளியீடான ''கலைமதி'' சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி ஒன்றினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி எய்துகிறேன்.

தமிழ் வாழ தரணியெங்கும் மன்றம் அமைத்து புகழ் சேர்க்கும் இன்றைய காலகட்டத்திலே தமிழ் கலாமன்றம் அமைத்து விழா எடுத்து தமிழ்மொழிக்குப் பங்காற்றும் பாங்கினைக் காண்பதில் புளகாங்கிதம் எய்துகிறேன்.

கல்வி எனும் போதினிலே அது நூலுக்கு மட்டும் மட்டுப் படாது வெளிக்களத்துறைகளோடும் சங்கமித்து பரந்து விரிய வேண்டும்; பல்துறை அறிவு வளர இது வழிகாட்டும்.

நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் கல்லூரிகள் வரிசையிலே தனக்கென ஒரு தனித்துவத்தைக் கொண்ட இக்கல்லூரியின் தமிழ்ப்பணி போற்றுதற்குரியதாகும்.

கலைவிழா வெற்றி காணவும்
''கலைமதி'' நீடுவாழவும்
ஆசிகள்!

எஸ்.ஏ.ஆர்.எம். பாரூக்,
உதவி செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# *Kandy Tractor & Motor Spares*

**Dealers in M/F, Ford & 4 Wheel Kubota ractor Spares**

***Agent For:***

*Sri Lanka State Trading (Tractor) Corporation*
*Sathiyawadi M. T. Ltd*
*Freudenberg Industries Ltd*

**68/B, Colombo Street,**
**Kandy.**

*Tele: 08 - 22894*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய மாகாணப் பிரதிக்கல்விப்பணிப்பாளர்
## அல்ஹாஜ். எம். வை. எம். முஸ்லிம் J. P. அவர்கள்
## அன்புடன் வழங்கிய ஆசிச்செய்தி

கண்டி புனித அந்தோனியார் கல்லூரியின் இவ்வாண்டுக்கான தமிழ்க்கலைவிழாவின் நிமித்தம் வெளியிடப்படும் 'கலைமதி' என்னும் இச்சஞ்சிகைக்கு என்னுடைய ஆசிச்செய்தியை அன்புடன் வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கண்டி புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க்கலாமன்றம் நீண்ட வரலாறுடையது. இம்மன்றம் வெளியிடும் 'கலைமதி' என்னும் கனதியான சஞ்சிகைக்கும் வரலாறுண்டு. இச்சான்றுகள் கல்லூரியின் தரத்தையும் தமிழ்மொழி மூலம் கல்விகற்கும் மாணவர்களின் சிறப்பையும் அவ்வப்போது உணர்த்தி வந்துள்ளன பாடசாலைக் கல்வியின் மூலமும், பாடத்தோடு தொடர்புடைய கருமங்களின் மூலமும் மாணவர்களுடைய வித்தைக்கோலங்கள் தெளிவுற எடுத்துக் காட்டப்படுகின்றன.

இவற்றின் மூலம் மாணவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் நடத்தை மாற்றம் ஏற்பட வேண்டுமென்பதே கல்வியலாளர் கருத்தாகும். ''கல்வி என்பது நடத்தை மாற்றம்'' என்று கருதப்படுவதனால் கல்வி கற்கும் மாணவர்களும் நல்லனவற்றை நாடவும், அல்லனவற்றைத் தவிர்க்கவும் தங்களைத் தயார் படுத்த வேண்டும். இம்மாற்றங்களுக்குரிய நல்வழிகளையும், நல்லுபதேசங்களையும் ஆசிரியர்கள் வழங்கி வழிகாட்ட வேண்டும். நமது பாடசாலைக் கலைவிழாக்களில் அரங்கேற்றப்படும் நிகழ்ச்சிகளும் இவ்வாறான கருதுகோளை மையமாக வைத்துச் செயற்படுத்தப்படல் வேண்டும். சமூகத்துக்குப் பொருத்தமான போதனைகளை, காலதேச வர்த்தமானம் நோக்கி அள்ளிவழங்கிட வேண்டும். இந்த நாட்டிலே அமைதியும், சமாதானமும், நல்லிணக்கமும் ஏற்படும் வகையில் இவை ஒழுங்கமைக்கப்பட வேண்டும். இதுவே இன்றையத் தேவையுமாகும். இவ்வருடக் கலைவிழா இவ் விலட்சியங்களை நிறைவு செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

கல்லூரியின் தமிழ்க் கலை விழாவுக்காக, அதன் அதியுயர் வெற்றிக்காகப் பாடுபடும் அதிபர், தமிழ்த்துறைத் தலைவர், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களும் நல் வாழ்த்துக்களும் என்றுமுண்டு. கலைவிழாவின் வெற்றிக்கு எனது அன்புகலந்த ஆசிகள்.

இவ்வண்ணம்

**எம். வை. எம். முஸ்லிம்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர்

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.
23.09.1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

# PEOPLES HARDWARE & TRACTOR CO.

*Dealers in all kinds of Tractor Spares*

**No. 160, D. S. Senanayake Vidiya,**
**Kandy.**

*Tele: 32139*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

கண்டி - கங்கவடகோரள பிரதேசத்திற்குட்பட்ட க/புனித அந்தோனியார் கல்லூரி தமிழ் கலாமன்றத்தினால் நடாத்தப்படும் கலைவிழாவிற்கும், அன்றைய தினம் வெளியிடவுள்ள ''கலைமதி'' சஞ்சிகைக்கும் எனது ஆசிச்செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கண்டிப்பிரதேசத்தில் அமைந்துள்ள இக்கல்லூரி பழமையும், புகழும் மிக்க ஒரு கல்லூரியாகும். இக்கல்லூரியில் பெரும்பான்மையாக சிங்களமொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் இருக்கின்ற போதிலும், தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களின் சகல கருமங்களுக்கும் அதிபரின் அனுசரணையும், ஒத்துழைப்பும் இருப்பது போற்றப்படக்கூடிய விடயமாகும்.

மாணவர்களுடைய கற்றல் தொடர்பான வெளிவேலைகளில், விசேடமாக கலை நிகழ்ச்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவது இக்காலக்கட்டத்தில் மிகவும் அவசியமானதாகும். மாணவர்களின் பண்பாட்டு விருத்திக்கும், உளவளர்ச்சிக்கும் இத்தகைய கலை நிகழ்ச்சிகள் இன்றியமையாதன என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளுவர். கலையும் பண்பும் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் மட்டுமன்றி முழு மனித சமுதாயத்துக்குமே இலட்சியமாய் அமைவதாகும். இத்தகைய ஓர் இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கலை விழாவின் வெற்றிக்கும் சிறப்புக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இவ்வுயரிய பணியில் ஈடுபட்டுழைக்கும் அதிபர், தமிழ்பகுதி பொறுப்பாளர், இக்கலாமன்ற பொறுப்பாளர், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

அல்ஹாஜ். என். எம். இஷாக்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
கண்டி

1994 09. 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from

A Well Wisher

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந் தலைவரின் ஆசியுரை

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய தமிழ் மொழியின் இனிமையையும் பெருமைகளையும் புகழும் நோக்குடன் புரட்சிக் கவி பாரதிதாசன்

'' தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நில வென்று பேர்
இன்பத் தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்''

என்று கலைபட எடுத்துக் காட்டுகின்றார். அத்தகைய இனிமையான தமிழின் இனிமையை அறிந்த புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க் கலாமன்றம், புலவரின் கருத்துக்கு மெருகூட்டுவது போல் தமிழின் சிறப்பை அகிலமெல்லாம் பரப்பிவருகின்றது. இப் பொறுப்பையேற்று செயற்பட்டு வரும் இம் முத்தமிழ் மன்றம் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துவதில் நான் பெருமை கொள்கின்றேன்.

எழில் தவழும் மத்திய மலைநாட்டில் இன மத வேறுபாடுகளுக்கப்பால் இயங்குமோர் தேசியக்கலைக்கூடமாகத் திகழ்வது புனித அந்தோனியார் கல்லூரி என்பது கூறின் பொருத்தமுடையது. இக் கலைக்கூடம் தமிழன்னைக்கு செய்து வரும் அரும்பணி நிலைத்திருக்க எமது அதிபர் அருட்தந்தை ஸ்டீபன் ஏபிரகாம் அவர்கள் காட்டிவரும் ஆர்வமும் ஒத்துழைப்புமே காரணமாகும். அது மட்டுமன்றி மாணவர்களால் வெளிக்கொணரப்படும் திறன்களை தமிழ்ப் பிரியரான எமது அதிபர் இரசிப்பதும் மாணவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுப்பது மட்டுமன்றி மன்றத்தின் வளர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றது.

தமிழ்ப் புலமை பெற்றவர்கள் மட்டுமல்ல தமிழ் வளர்ப்பதில் நாமும் சளைத்தவர்கள் அல்ல என்ற உயர் எண்ணம் படைத்த எமது தமிழ்த் துறை மாணவர்களால் படைக்கப்பட்ட ஆக்கங்களால் இணை சஞ்சிகை உங்கள் கைகளில் தவழப் போவதையிட்டு பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

மேலும் எமது முத்தமிழ் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்கு ஒத்துழைப்பும் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய அதிபர் அவர்கட்கும் தமிழ்த் துறைத் தலைவி அவர்கட்கும் சகல ஆசிரிய பெருமக்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் என் உள்ளங்கனிந்த நன்றி கலந்த பாராட்டுக்கள்.

**திருமதி. லோகேஸ்வரி இரட்ணராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments of

WOODLANDS
ICE CREAM

63, Kandawala Mawatha,
Ratmalana.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருஞ் செயலாளரின் ஆசிச் செய்தி

பல்மொழிகள் வளர்ந்துவரும் அகிலத்தில் தமிழ்மொழி போல் இனிதாவதொன்றும் இல்லை என தமிழ் மொழியின் சிறப்புபற்றி பாரதியார், பாரதிதாசன், கம்பர் போன்ற புலவர்களால் வர்ணிக்கப்பட்டது, மட்டுமன்றி தமிழர்களும் தட்டியெழுப்பப்பட்டுள்ளார்கள்.

என்னுறும் தமிழையே எண்ணீர்
இசைந்துழி தமிழையே இசைப்பீர்
பண்ணுறும் போதும் தமிழ்ப்பணி தன்னையே
பழுதறப் பண்ணியின்புறுவீர்.

தமிழன்னையின் சுந்தரத்தமிழ்ப் பெருமையை அறிந்த எமது தமிழ்க் கலாமன்ற இயல், இசை நாடகம் ஆகிய முந்துறைகளையும் வளர்க்கும் பொருட்டு அரும் பாடுபட்டு வருகின்றது.

இன்று வெகு விமர்சையாகக் கொண்டாடிக் கொண்டுள்ள இவ்விழாவின் வெற்றிக்கு எமது அதிபரின் ஆலோசனையும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் மாணவர்களின் ஆக்கங்களும் காரணமாகின்றது அவர்களின் இவ்வரும் பணிக்கு என் மனங்குளிர்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் பேரானந்தமடைகின்றேன்.

இவ்விழாவுக்கு மெருகூட்டுவது போல் மாணவ தமிழாக்க மலர்களால் ஆன ஆரம் உங்கள் கரங்களில் தவழ்ந்து வருகின்றது. இவ்விழா மலர் சிறப்படைய காரணமாக அமைந்த ஆசிரியர்கள், மாணவர்கள், விளம்பரதாரர்கள் அச்சேற்ற உதவிய றோயல் அச்சகம், பழைய மாணவர்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த பாராட்டுக்கள்.

செல்வி. ஆர். ஏ. சந்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

# NEW QUEEN BISCUITS

8th Mile Post,

Hedeniya,

Werellagama.

☎ 08–99687

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய்க்கோர் மடல்

## அன்புள்ள தமிழ்த்தாய்க்கு...!

அன்புள்ள அம்மாவுக்கு ..!
உன் அன்புமகன் எழுதிக்கொள்வது!
தாயே...!
என் அண்ணன்கள் காட்டியவழியில்
இன்று நானும் ..!
ஆமம்மா வெள்ளிவிழாக் கண்டுவிட்ட உனக்கு
நம்கரங்களால் மற்றுமொரு வெற்றிவிழா படைக்கக்கண்டு
நாம் பூரிக்கின்றோமம்மா!

அன்பின் வடிவமே!
உன் மடியில் உதித்தவர்கள்
இன்று உன்மைந்தர் என்று சொல்ல அஞ்சுகிறார்!
நாம் அஞ்சவில்லை தாயே!
அஞ்சுபவர் நெஞ்சுறுதியில்லா மூடரன்றோ!

பாசத்தின் பிறப்பிடமே!
உன்னடியில் தவழ்ந்தவர்கள்
இன்று உன்பேர் சொல்ல நாணுகிறார்!
நாம் நாணவில்லை தாயே!
நாணவேண்டியவர் தன்மானமில்லா ஈனரன்றோ!

ஆனாலும் அம்மா..!
அவர்களால் உன் பெருமை
அணுவாலும்
குறையப்போவதில்லை!
கல்தோன்ற முன்தோன்றிய நீ
இம்மண் மறைந்தாலும்
மறையப் போவதில்லை!

வெள்ளிதனைக் கண்டு விட்ட உன்பாதையினில்
பொன்னதனை நோக்கியதோர்
மற்றுமொரு படிதானம்மா
நாமெடுக்கும் இந்தக் கலைவிழா!

உன்னழகு காண இன்று
நம்மோடு வந்திணைந்த
பிரதமவிருந்தினரை பெற்றோரை பெரியோரை
இதயச்சிப்பியின் வார்த்தைமுத்துக்களால்
வரவேற்கின்றேன் தாயே!

உன்மைந்தர் களிப்பு காண
நீயுமிங்கே வருவாயென்று
எதிர்பார்த்துக் காத்திருப்பேன்
ஆவலுடன் நானுமிங்கு!

இப்படிக்கு,
எப்போதும் உனைமறவாத
உன் அன்புமகன்

சி. கிருஷ்ணபிரதீப்
தமிழ்க்கலாமன்ற மாணவதலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய தின விழாவை முன்னிட்டு
# போட்டி முடிவுகள்

**பேச்சுப்போட்டி:-** கீழ் பிரிவு - 1. ஜீ. பாலச்சந்திரன்
2. டி. ஜே. நிஷாந்தன்
3. கே. விஜயபாபு

மத்திய பிரிவு - 1. பி. எம். ரஷீட்
2. ஆர். கண்ணா
3. எம். எம். எம். ஃபலில்

மேற் பிரிவு - 1. எஸ். கிருஷ்ணபிரதீப்
2. எம். குலேந்திரன்
3. பி. பிரதீப்

**கட்டுரைப் போட்டி:** கீழ் பிரிவு - ஆர். ஜெயகாந்த்
மத்திய பிரிவு - கே. விஜயபாபு
மேற் பிரிவு - எம். எஸ். சதீஸ் சவரிமுத்து

**நாடகப்போட்டி:**
- 1. DOUBLE BLUE
- 2. LIGHT BLUE
- 3. DARK BLUE

சிறந்த நடிகர் - எஸ். எச். எம். இர்சாட்

*With Best Compliments from*

**Vigneswaran Stores**

*Leading Oil Merchants in Kandy*

**173, Colombo Street,**
**Kandy.**

☎ 23014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவு மெய்ப்பட்டபோது . . .

பூமண்டலமெங்கும் புகழ்பரப்பும் புனித அந்தோனியார் கல்லூரியிலே, தரணி எங்கும் தமிழ் பரப்ப, கலைமகளை களிப்பிளாற்ற, வீறு கொண்டெழும் மாணவரின் தமிழ் தாகத்திற்கு, அவர்களின் எண்ணத்திலே தோன்றிய இக் கலைவிழாவும், அவர்களின் கைவண்ணத்திலே தோன்றிய ''கலைமதி'' எனும் இச் சஞ்சிகையும் சான்று பகர்கின்றன.

மலையகத்தின் கலையகமான எமது கல்லூரியின் கலாமன்றம், ஆண்டுகள் இருபத்திஆறை பூர்த்தி செய்த பின்னரும், இன்னும் மின்னும் இளமையுடன் முத்தமிழை முன்னிறுத்தி தமிழ் மாணவமணிகளின் இளநெஞ்சங்களில் ஊற்றெடுக்கும் கலையாற்றல்களை, மொழியாற்றல்களை, சிந்தனை சிறப்புக்களை உலகோருக்கு உணர்த்தும் வகையில், தன்னிகரில்லா சேவையை தொடர்ந்தும் ஆற்றி வருகின்றது.

தமிழ் மாணாக்கரை புது யுகத்திற்கு வழி நடாத்திட, கொஞ்சும் தமிழை கொஞ்சம் கொஞ்சமாக தலை நிமிர்த்திட, வருடம் ஒருமுறை பூக்கும் புஷ்பமான கலைவிழாவை இனிது நடத்திட, காப்பியத்திற்கு ஒப்பதான ''கலைமதியை'' உங்கள் முன் படைத்திட, ஆதரவு நல்கிய ஆசிரியர்களுக்கும், எமது கலை பயணத்திற்கு ஒரு கலங்கரை விளக்கமாக திகழும் அதிபர் அவர்கட்கும், கலைவிழாதனை தன் வருகையால் சிறப்பித்த பிரதம அதிதி அவர்களுக்கும், உதவியும் ஊக்கமும் நல்கிய பழைய மாணவர்களுக்கும், ''எமது தேவை கலைச்சேவை'' என்று அறை கூவும் எனது சக செயற்குழு அங்கத்தினருக்கும், எனது இதயம் கனிந்த நன்றிகள்.

**பிரபு பிரேம்குமார்**
மாணவ செயலாளர்
(தமிழ்க் கலாமன்றம்)

**ROYAL PRINTERS**
**Printers - Publishers - Stationers**
*190, Colombo Street,*
*K A N D Y.*
☎ *22313 - 072 60142*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

*Island Trade Centre (Private) Ltd.*

**General Hardware Merchants, Importers & Exporters**

437, Old Moor Street,
Colombo - 12

**Phone: 431223, 435569 Telex: 21583 Teleco CE Attn: Island**
**Cable: Rajamur Fax: 94-1-440950**

---

*With Best Compliments of*

**COLOMBO CHEMICALS**

**COLOMBO - 12**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ இதழாசிரியரின் கருத்திலிருந்து

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத் தொழுது படித்திடடி பாப்பா.
பல மொழிகளை படித்துணர்ந்த பாரதி சின்னஞ்சிறு பாலர்களுக்கு உரைத்த சீரிய வார்த்தை இது.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்..
என்று உலகுக்கு எடுத்துச் சொன்னவனும் அந்த மகாகவிதான்.

பாரதி போன்ற புலவர் பெருமக்களாற் புகழ்ந்து போற்றப்பட்ட தமிழ் மொழி உலகச்செம்மொழிகளுள் ஒன்றாகும். இது பல நூற்றாண்டுகளுக்கு முன்தோன்றியதாயினும். இன்றும் பல கோடி தமிழரின் நாவில் பவனிவரும் பேற்றினை உடையதாக விளங்குகிறது. இதனாலன்றோ 'மனோன்மணியம்' ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை

ஆரியம்போல் உலக வழக்
கழிற் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து
செயன் மறந்து வாழ்த்துமே என்று பாடிப்பரவசமடைந்தார்.

பழம் பெருமைவாய்ந்த இம்மொழியின் வளர்ச்சியில் கம்பன், வள்ளுவன், இளங்கோ, பாரதி, பாரதிதாசன், இத்தாலியப் பாதிரி வீரமாமுனிவர் என்ற வரிசையில் ஈழத்துப் பெரியார்களின் பங்களிப்பும் உண்டு. அந்த வரிசையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர் சித்திலெப்பை, உமறுப்புலவர், தவத்திரு தனிநாயக அடிகள், பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கைலாசபதி இன்னும் பலர் அடங்குவர். மொத்தத்தில் தமிழ்மொழி வளர்ச்சியானது இந்து மதத்தைச் சார்ந்த பெரியார்களாலும் கத்தோலிக்க, கிறிஸ்தவ மதப் பாதிரிகளாலும், இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த பெரியார்களினாலும் வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றமை வரலாற்றுண்மையாகும். அந்த வகையில் இலங்கையின் மத்தியநகரமாம் கண்டியில் மகாவலி நதிக்கரையில் அமைந்துள்ள புனித அந்தோனியார் கல்லூரியில் மும்மதத்தைச் சார்ந்த தமிழ்பேசும் மாணவர்களாலும் முத்தமிழுக்கு எடுக்கவிருக்கும் கலைவிழாவைப் பாராட்டுவதில் பேருவகை கொள்கின்றேன். இந்தக் கலைவிழாவையொட்டி கலையன்னைக்கு நாம் அணிவிக்கும் மகுடம் தான் இன்று வெளியிடப்படும் கலைமதி என்ற சஞ்சிகையாகும். மாணவர்களின் இலைமறைகாய் போல் கிடக்கும் எழுத்தாற்றலை வெளிக்கொணரவும் மாணவர்களுக்கிடையே எழுத்தாற்றலை ஊக்குவிப்பதற்காகவும் முதன் முதலில் கையெழுத்துப் பத்திரிகையாக கலைமதி இருபது வருடங்களுக்கு முன் வெளியிடப்பட்டது. பின்பு அச்சிடப்பட்டு மாதத்திற்கொருமுறை வெளியிடப்பட்டது. கடந்த மூன்று வருடங்களாக நன்கு மெருகேற்றப்பட்டு கலைவிழாவின் போது வெளியிடப்பட்டு வருகின்றது. இந்த மலரை வெளியிட பண உதவி நல்கிய தமிழ் அன்பர்களுக்கும், குறுகிய காலத்தில் அச்சுருவேற்றிய றோயல் அச்சகத்தினருக்கும் மாணவர்களது ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து பட்டை தீட்ட உதவிய ஆசிரியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதோடு அவர்களின் கலைப்பணி மென்மேலும் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

''புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்த தமிழ்மொழி''
''தெள்ளுற்ற தமிழ் அமுதத்தை தொழுது படித்திடுவம்''

திரு. A. தேவதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

# *Sri Lanka Furnishing House*

*Authorised Dealers For*
*Arpico, Alpha & Usha*

**No. 245 Main Street,**
**Matale.**

*Branch:*
**No, 83 Gongawela Road,**
**Matale.**

*T.P. 066 - 2560*

---

*With Best Compliments of*

# IYME STORES

**MATALE**

*Dial: 066 - 2346*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளியினின்று விடிவெள்ளியாய்
# பொன்விழா நோக்கிய இரண்டாம் மலர்ப்படி

ஒளி விளக்கின் உதவி கொண்டு கலை விளக்கை ஏற்றி வைக்கும் எம் கலாமன்றத்தின் 27ம் மைல் கல்லின் காலடியில் கலையமுது பருகி மனநிறைவு காணவந்த அனைவர்க்கும் மணம் பரப்பி மனம் மகிழ்த்தும் இக் கலை அன்னையின் பொன்விழா நோக்கிய பாதகமலத்தினை இவ்விதழ் கொண்டு சிறப்பிக்க எழுத்தாணி ஏந்திய என்கை முதற்கண் ''கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மூத்த'' தமிழன்னைக்கு சிரம் தாழ்த்தி வணங்கி மனம் களிக்கின்றது.

கலைத்துவம் மிக்க எம் இளையோரின் தமிழ்மணம் பரப்ப தமிழன்னையின் சேயாய் மலர்ந்த இம்மலரை புனித அந்தோனியார் கல்லூரியின் மடியில் கிடத்தி தாயன்பின் அரவணைப்பில் தலை சாய்த்துத் துயிலுரும் சேயாய் தங்களிடம் தந்து நெஞ்சம் குளிர்கின்றேன்.

தமிழன்னையின் சேயை சிறப்பிக்க உதவிய அனைவர்க்கும் நன்றி கூறுவதோடு கடந்த 25 ஆண்டுகளாய் தமிழ் மணம் சுகந்தமுறக் காற்றாய் கொடியேற மரமாய் நின்ற வண பிதா ஸ்டீபன் ஏப்ரகாம் அவர்கட்கும் ஒளியேற்றி குன்றிலிட்டு உலகறியச் செய்து அனைவர்க்கும் களிசேர்த்த தமிழ்ப்பிரிவின் தலைவியான எம்மன்னைக்கும் தமிழன்னையின் இக்கொடிக்கு வித்திட்டு நீரூற்றி பூப்பூக்கும் நேரத்தில் மணம் காண வந்த பிரதம அதிதிக்கும் நன்றி கூறி இம் மலர் தங்கள் பஞ்சுக் கரங்களில் கலையலை மோதி கவின்மணம் பரப்பி கலைமதி முழுமதியாய் மணம் பரப்பும் என நம்பும் . . .

**வெ. தனஞ்ஜெயன்**
*(மாணவ இதழாசிரியர்)*


*With Best Compliments from*

**TAAI LANKA MOTOR TRADERS**

IMPORTERS & SUPPLIERS OF USED
DIESEL ENGINES, MOTOR SPARES & ACCESSORIES

**340, D. S. Senanayake Veediya,**
**KANDY.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

# AVON STEELS

Importers, Dealers and Stockists of
Iron & Steel, Tor Steel, Flat Iron,
Angle Iron, B. I. Sheets, Aluminium
Sheets & Coils, G. I. Pipes, G. I.
Wires and Furniture Tubes.

*346, Old Moor Street,*
*Colombo - 12.*

Phone: 432445, 448254, 338771
Fax: 94-1-438116

# A. J. TEXTILES

Dealers in Textiles.

188/2E, Keyzer Street,
Colombo 11.

Tele: 446696

# Ceylon Steel Company

IMPORTERS & GENERAL
HARDWARE MERCHANTS

*332, Old Moor Street,*
*Colombo - 12.*

Phone: 434875, 25023
CABLE "CEYSTCO"

# LANKA COMMERCIAL CENTRE

*77, 79, Wolfendhal Street,*
*Colombo 13.*

*Tele: 435919, 437591*
*Fax: 448469*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நிலவு ஓய்வெடுக்கப் போகின்றது

நீ
ஜனனித்த ஆண்டு
இப்போதிருந்தால்
மகிழ்ந்திருக்கும்
ஆனால்
அது மடிந்து
அறுபதாண்டுகள்
ஆகின்றனவே...

உம்மைச் சுமக்கும்
ஒவ்வொரு தினமும்
பெருமை(ப்)
பட்டுக்கொள்ளும்.

உம்
புகழ் விழுதுகள்
நீண்டுகொண்டே
செல்கின்றன.

உம்மில்
எத்தனை ஜீவன்கள்
தங்கியிருக்கின்றன?
ஒன்றா? இரண்டா?
நாலாயிரம்!

உமது நிழலில்
கல்வியருந்திய
பாத யாத்திரிகள், நாம்.
எம்
ஒவ்வொரு
உடம்புக்குள்ளும், நீ
இரண்டாவது உயிர்

அழித்து அழித்து
எழுதப்பட்ட எம்
மனக்காகிதங்களில்
புதுக்கவிதையைப்
புகுத்தியவன், நீ...
எம்
ஒவ்வொரு
உள்ளத்திலும்
நீ
தவழும் ஓசையை
இவ்வுலகு
கேட்டுக்கொள்ளட்டும்.

இருபத்தைந்தாண்டுகளாய்
புனித அந்தோனியார்
மண்ணில்
வளர்ந்து விட்ட
நீ...
பசளையை
உறிஞ்சவில்லை.
மாறாக
வளம் சேர்க்கிறாய்...

அதிபராக
பதினாறாண்டுகள்
நீ
ஊன்றிய
விழுதுகளையெல்லாம்
அறுத்துக்கொண்டு
போவது நியாயமா?

இக்கல்லூரியை
விட்டுப்போக(க்)
கல் நெஞ்சத்தைதந்த
இறைவனை,
இப்போது தான்
கோபித்துக்கொள்கிறோம்.

யார் சொன்னது, நீ
ஓய்வு பெறும்
காலமென்று?
இப்போது தான், உன்
சேவையே ஆரம்பம்!

இம் மாணவ
நட்சத்திரங்களை
நீ
விட்டுப்போவதானால்
வானில்
இனிமேலும்
நிலவெதற்கு?

ஓ...
வண பிதா.
ஸ்டீவன் ஏப்ரஹாம்
கத்திகளுக்கு
வெட்டித்தான் பழக்கம்
ஒட்டிப் பழக்கமில்லையே...
உம்மையும்
எம்மையும்
வெட்டிப்பிரிக்கும்
இவ்வயதுக்கத்தியை
நாம்
தூற்றுவதா?
போற்றுவதா?

பழைய மாணவர்கள் சார்பாக...
- கலாகேதர உனைஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பிரிவுத் தலைவரின் அறிக்கை

கண்டி புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க் கலாமன்றம் பதின் நான்கு தசாப்த சரித்திரப் புகழ் வாய்ந்தது மட்டுமல்லாமல் இருபத்தியேழு ஆண்டுகளையும் பூர்த்திசெய்துள்ளது. வெள்ளிவிழாவைக் கண்டு இன்று இருபத்திஐந்தாவது கலைவிழாவை மேடையேற்றி பெருமிதம் கொள்ளும் இம்மன்றம், 1967ம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 9ம் திகதி பதவியிலிருந்த அதிபர் அமரர் வண பிதா ஏடன் டீ சில்வா அவர்களின் பணிப்புரையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டு தென்னிந்திய திருச்சபையின் இன்றைய மேற்றிராணியாரான அதி. வண. கலாநிதி செபநேசன், திரு. சிவானந்தன், அமரர்களான திரு. மகேசன், திருமதி வித்தியானந்தன், திரு ஆனந்த இராஜேந்திரன் ஆகியோரது பெருமுயற்சியினால் வளர்ச்சியடையத் தொடங்கியது.

1967ல் முதலாம் கலைவிழாவை அரங்கேற்றிய எமது மன்றம் 1977ம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரத்தாலும், பாடசாலை அரசிடம் கையளிக்கப்பட்டதாலும், தமிழாசிரியர்களின் இடமாற்றத்தாலும் செயலிழந்தது. 1978ல் உயர் வகுப்பு மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க அமரர் திரு. இராஜேந்திரனின் பெருமுயற்சியினால் ஐப்பசி மாதத்தில் கலாமன்றம் ஆசிரியர்களால் பொறுப்பேற்கப்பட்டு பதின்மூன்று நாட்களில் கலைவிழா விமரிசையாக அரங்கேற்றப்பட்டு தொடர்ந்து பல கலை விழாக்களை அரங்கேற்றி இன்று இருபத்தி ஐந்தாவது விழாவையும் அரங்கேற்றிக்கொண்டுள்ளது.

இன்று அரங்கேறிக்கொண்டிருக்கும் இவ்விழா மிக முக்கியமானதாக அமைகின்றது. முப்பது வருடங்களாக கல்வித்துறைக்குத் தன்னை அர்ப்பணம் செய்த வண பிதா ஸ்டீபன் ஏபிரகாம் அவர்கள் தனது சேவைக்காலத்தில் இருபத்தி ஐந்து ஆண்டுகளை எமது பாடசாலையில் பூர்த்தி செய்துள்ளார். விடுதி மேற்பார்வையாளராகவும், ஒழுக்கக் கட்டுப்பாட்டாளராகவும், பிரதம பாடசாலையின் பணிப்பாளராகவும், விளையாட்டுத்துறையின் பொறுப்பாளராகவும் கடமையாற்றி, மேற்படிப்பிற்காக வெளிநாடு சென்ற இவர் 1978ல் அரசாங்கத்திடம் பாடசாலை கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட தேக்க நிலைக்கு புத்துயிர் அளிக்கும் பொருட்டு பலரின் வேண்டுகோளுக்கமைய 1979ம் ஆண்டு எமது கல்லூரி அதிபராகப் பதவியேற்றார். இதன் பின் பதினாறு வருடங்கள் கல்லூரி அதிபராக மட்டுமல்லாமல் கலாமன்றத்தின் போஷகராகவும் அரும்பணி புரிந்து வருகின்றார். கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுக்கு எடுத்துக்காட்டான எமது அதிபரின் வழிகாட்டலும் எமது கலாமன்றத்தின் வெற்றிக்கு காரணமாக அமைந்ததையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். விரைவில் சேவையிலிருந்து இளைப்பாறவிருக்கும் எமது அதிபர் கலாமன்றத்துக்கு ஆற்றிய சேவைக்கு மன்றமானது என்றென்றும் கடமைப்பட்டுள்ளது, 1983ல் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு, அகதிகளாக்கப்பட்டு எமது பாடசாலைக்கு வந்த தமிழர்களை, அந்தோனியார் நிழலை நாடிவந்தவர்களென அன்பு காட்டி ஆதரித்து அவர் தமிழினத்திற்கு ஆற்றிய சேவையை நாம் மறப்பது நன்றன்று.

எமது தமிழ் கலாமன்றத்தின் பணிகளோ பல மாணவர்களிடையே பேச்சுத்திறனை வளர்ப்பதற்காக பேச்சுப் போட்டிகளையும், விவாதிக்கும் ஆற்றலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பதற்காக விவாதப்போட்டிகளையும் நடிக்குமாற்றலை வளர்ப்பதற்காக நாடகப் போட்டிகளையும் நடத்தி வந்துள்ளது. வெற்றி பெறும் மாணவர்களுக்கு கல்லூரி பரிசளிப்பு விழாவின் போது பரிசில்கள் வழங்கப்படுகின்றன. தமிழ்த் தின விழாப்போட்டிகளில் எமது மாணவர்கள் கலந்து கொண்டு கோட்ட மட்டத்தில் பல பரிசில்களைப் பெற்றனர். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு பரிசில்களை கலைவிழாவின் போது வழங்கி மாணவர்களை ஊக்குவித்து வருகின்றது. திறமைமிக்க, பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் வழங்கியுள்ளது. மாணவர்களின் வாசிக்குமாற்றலை மேம்படுத்துவதற்காக வாசிகசாலைக்கு தமிழ்ப் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

தமிழ்க்கலாமன்ற வளர்ச்சிக்குதவும், ஆசிரியர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், நிதியுதவி புரிந்து வரும் ஆதரவாளர்களுக்கும், ஆசிச் செய்திகளையும், ஆலோசனைகளையும் வழங்கி எம்மை ஊக்குவிக்கும் அதிபரவர்களுக்கும், கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கும் மனமுவந்து எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எமது கலாமன்றம் பல நூற்றாண்டுகளைக் கண்டு தமிழ் என்னும் அமுதத்தை எல்லோரும் சுவைக்குமாறு வழங்கி ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி வாழ வாழ்த்துகிறேன்.

**திருமதி இந்திரா சிவரட்னம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

**Onida Steels**

IMPORTERS & STOCKISTS OF IRON & STEEL

*41, Quarry Road,*
*Colombo - 12.*

*Tele: 445065, 338889.*
*Fax: 440950*

**Janatha Steels**

Importers & General Hardware Merchants.

*20, Quarry Road,*
*Colombo - 12.*

☎ 421412, 325807

**TRANSWOOD**

Importers & Dealers in Plywood, Plywood Doors, Chipboard, Formica, Hardboard and General Hardware Merchants.

*27, Quarry Road,*
*Colombo - 12*

T'Phone: 320103, 331483
Fax: 332680

**AMRITHAA**

*Specialist in WEDDING SAREES*

No. 7-B/5, Galle Road,
Orchard Shopping Complex,
Wellawatha, Colombo - 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியின் சிறப்பு

தமிழ் எமது தாய்மொழி. தமிழ் இனிமையானது. இனிமையே தமிழ், ''எழில் என்பதே தமிழ் ஆயிற்று என்பது'' சொல்லாராய்ச்சியாளர்கள் முடிவு. உயர் தனிச் செம்மொழிகளுள் ஒன்றாக எமது அருமைத் தாய் மொழியான தமிழ் விளங்குகின்றது.

இதனாலன்றோ ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழியைப் போல் இனிதாவ தெங்கும் காணோம்''

என்று பெருமையுடன் பாடியுள்ளார் பாரதியார்.

தமிழ் மொழி பழம்பெருமை வாய்ந்தது. இது கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்னிருந்து விளங்கி வந்ததாகச் சான்றுகள் கூறுகின்றன. தமிழின் சிறப்புப் பண்பையுணர்ந்த நம் முன்னோர் அதனை இயற்றமிழ், இசைத்தமிழ் நாடகத்தமிழ் என முப்பிரிவு படுத்தினர். தமிழ் சங்கங்கள் தமிழ் நாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழியை வளர்த்து வந்துள்ளன என்பதற்கு சான்றுகள் உள. ஒரு காலத்தில் இமய மலை முதல் இலங்கை வரையில் ஒரு மொழி வழங்கிற்று என்பதும் அம்மொழி எமது அருமைத் தமிழ் மொழியே என்பதும் தற்போது தெரியவந்துள்ளது. முற்காலத்தில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களும் பிற்காலத்தில் கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களும் தமிழை வளர்த்து வந்துள்ளன. குறுநில மன்னர்களும் முடியுடை மூவேந்தர்களும் தமிழை பேணினர்.

திருக்குறள், ஐம்பெருங்காப்பியங்கள், யாழ்நூல், கம்பராமாயணம் போன்ற தமிழின் சிறப்புப் பண்பையுணர்த்தும் நூல்களை இன்றும் உலகில் வேறெந்த மொழிகளிலும் காணக்கிடைக்கும் என்பது சந்தேகமே.

தமிழ் அன்னையே நீ தழைத்தோங்க வேண்டும் என்று கூறிய மகாகவி பாரதியார் இன்று இவ்வுலகில் இருந்தால் தமிழ் எவ்வளவு தலை சிறந்து விளங்குகிறது என்பதை நினைக்கும்போதே நெஞ்சில் தமிழ் மணக்கின்றது.

தேன்மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வகைசெய்வதோடு வெளிநாட்டார் அதனை வணங்கச் செய்ய வேண்டும் என்ற பாரதியாரின் கனவை நனவாக்க வேண்டும் என்பதே என் அவா.

''தமிழுக்கு அமுதென்று பேர்
இன்பத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர்
இன்பத் தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணமென்றுபேர்
இன்பத் தமிழ் எங்கள் வாழ்வுக்கு தருமிந்த நீர்
தமிழுக்கு முது வென்றுப் பேர்
இன்பத் தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்''

வாழ்க தமிழ்!

வளர்க தமிழ்க் கலாமன்றம்!!

தொகுப்பு:

G. L. இராஜேந்திரன்

ஆண்டு 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கலாமன்ற செயற்குழு

அதிபர் :- வண. பிதா. ஸ்டீபன் ஏபிரகாம்

தமிழ் பிரிவுத் தலைவர் :- திருமதி. ஐ. சிவரட்னம்

பெருந்தலைவர் :- திருமதி. எல். இரட்ணராஜா

கௌரவ செயலாளர் :- செல்வி. ஆர். ஏ. சந்தனம்

கௌரவ பொருளாளர் :- திரு. எ. எம். எஸ். சந்திரசேகர்

கௌரவ இதழாசிரியர் :- திரு. ஏ. தேவதாசன்

குழு அங்கத்தவர்கள் :- திருமதி. எஸ். பி. ஆப்டீன்
திருமதி. பி. செல்வநாயகம்
திருமதி. ஜெ. சேதுபதி
திருமதி. எப். கிருபையம்மா
செல்வி. வை. இராசையா

மாணவ செயற்குழு

தலைவர் - செல்வன். எஸ். கிருஷ்ணபிரதீப்

உபதலைவர் - செல்வன். ஜீ. ரமேஸ்

செயலாளர் - செல்வன். பி. பிரபு பிரேம்குமார்

உபசெயலாளர் - செல்வன். ஆர். ரியாஸ்

பொருளாளர் - செல்வன். எஸ். சுதர்சன்

உபபொருளாளர் - செல்வன். எல். சர்மிலன்

இதழாசிரியர் - செல்வன். வி. தனஞ்ஜெயன்

குழு அங்கத்தவர்கள் - செல்வன். எம். கேதீஸ்வரன்
செல்வன். எம். மைதீஸ்வரன்
செல்வன். எம். ரிபாஸ்
செல்வன். ஆர். ஆனந்தகிருஷ்ணன்
செல்வன். பி. கிருபாகரன்

வகுப்புப் பிரதிநிதிகள்:-

ஆண்டு 7 - எஸ். எம். யாசீர்

ஆண்டு 8 - ஜெயகாந்தன்

ஆண்டு 9 - நிஷாந்தன்

ஆண்டு 10 - கே. விஜயபாபு

ஆண்டு 11 - விஜயாபரன்


ஆண்டு 12 - எம். எச். எம். பாஸி (விஞ்ஞானம்)

ஆண்டு 12 - எம். இஸ்ஸட். சுபைர் (வர்த்தகம்)

ஆண்டு 13 - எம். இம்ரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TAMIL CULTURAL SOCIETY - [illegible]



Seated Left to Right

Mrs. J. Sethupathi, Mrs. B. Selvanayakam, Mrs. I. Sivaratnam, Mrs. L. Ratnarajah, S. Krishnapradeep, Rev. Fr. Abraham Stephen, P. P. Premkumar, Miss. R. A. Santhanam, Miss. Y. Rasiah, Mrs. S. P. Abdeen, Mrs. K. Fernando, Mr. A. M. S. Chandrasekar.

Standing Left to Right

A. M. M. Fariqus, P. Kirubsharan, M. R. M. Riyas, G. Ramesh, L. Sharmilan, N. Kavieeswaran, S. Sutharshan, M. Rifas, V. Thananjevan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கலாமன்ற செயற்குழு

அதிபர் :- வண. பிதா. [illegible]

தமிழ் பிரிவுத் தலைவர் :- திருமதி. ஜ. [illegible]

பெருந்தலைவர் :- திருமதி. எல். இ[illegible]ஜா

கௌரவ செயலாளர் :- செல்வி. ஆர். ஏ. [illegible]

கௌரவ பொருளாளர் :- திரு. ஏ. எம். என். சந்திரசேகர்

சஞ்சிகை ஆசிரியர் :- திரு. ஏ. தேவதாசன்

குழு அங்கத்தவர்கள் :- திருமதி. எஸ். பி. ஆப்டீன்

திருமதி. பீ. செல்வநாயகம்

திருமதி. ஜெ. சேதுபதி

திருமதி. எம். இருபையம்மா

செல்வி. கே. இராசையா

மாணவ செயற்குழு

தலைவர் - செல்வன். எஸ். திருஞானபிரதீப்

உபதலைவர் - செல்வன். ஜீ. [illegible]

செயலாளர் - செல்வன். பி. பிரபு [illegible]

உபசெயலாளர் - செல்வன். ஆர். [illegible]

பொருளாளர் - செல்வன். எஸ். [illegible]

உபபொருளாளர் - செல்வன். எஸ். சஞ்சீவன்

இதழாசிரியர் - செல்வன். வி. [illegible]

குழு அங்கத்தவர்கள் - செல்வன். எம். கேதீஸ்வரன்

செல்வன். எம். மகேஸ்வரன்

செல்வன். எம். கிபால்

செல்வன். ஆர். ஆனந்ததிருஞானம்

செல்வன். பி. கிருபாகரன்

வகுப்புப் பிரதிநிதிகள்:-

ஆண்டு 7 - எஸ். எம். பாசீர்

ஆண்டு 8 - ஜெயகாந்தன்

ஆண்டு 9 - நிஷாந்தன்

ஆண்டு 10 - கே. விஜயபாபு

ஆண்டு 11 - விஜயகுமார்

ஆண்டு 12 - எஸ். [illegible] பாலி (கிருதானம்)

ஆண்டு 12 - [illegible] இஸ்மைல் (வர்த்தகம்)

ஆண்டு 13 - எம். இம்ரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TAMIL CULTURAL SOCIETY - 1994



**Seated** Left to Right

Mrs. J. Sethupathi, Mrs. B. Selvanayakam, Mrs. I. Sivaratnam, Mrs. L. Ratnarajah, S. Krishnapradeep, Rev. Fr. Abraham Stephen, P. P. Premkumar, Miss. R. A. Santhanam, Miss. Y. Rasiah, Mrs. S. P. Abdeen, Mrs. K. Fernando, Mr. A. M. S. Chandrasekar,

**Standing** Left to Right

A. M. M. Farique, P. Kirubaharan, M. R. M. Riyas, G. Ramesh, L. Sharmilan, N. Ketheeswaran, S. Sutharshan, M. Rifas, V. Thananjeyan:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 ஆண்டுகள் கல்வித் துறையில் தம்மை ஈடுபடுத்தி,
கால் நூற்றாண்டை புனித அந்தோனியார் கல்லூரிக்கென
தம்மை அர்ப்பணம் செய்த

## வண. பிதா. ஸ்டீபன் ஏபிரகாம்

அவர்களுக்கு,

வண. பிதா. ஸ்டீபன் ஏபிரகா மென்னும்
எழில் மிகு தெய்வத்தை,
வணங்கியே அவனடி வாழ்த்திடும் நெஞ்சம்
ஆயிர மாயிரமாம்.

கொழும்பினிற் பிறந்து புனிதநற் ஜோசப்
கொடுத்திடக் கலை பயின்று
விழுமிய குணங்கள் ஒன்று திரண்ட
வித்தக குருவானார்.

புனித நல் லந்தனிஸ் கல்லூரி யாமிது
புவியினில் ஒளிபரப்ப
பணிவுடன் கடமை கண்ணியம் காத்து
பகலவ னாயொளிர்ந்தார்.

இறைபணி யோடு இருபத்தி ஐந்து
ஆண்டுகள் பணி செய்து
மறை புகழ் பெருமான் அறுபத் தொன்றில்
மறந் தெமைப் பிரிகின்றார்.

மண்ணவர் போற்ற விண்ணவர் ஏத்த
வழங்கிய சேவையினை
எண்ணியே நாங்கள் வாழ்க பல்லாண்டென
வாழ்த்தியே விடை கொடுப்போம்.

- தமிழ் கலா மன்றம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

**Asiatic Commercial Agency**

Agents for
LANKA TOR STEEL

Importers & General Hardware Merchants.

*455, Old Moor Street,
Colombo - 12*

☎ 437023

**MULTI STEEL COMPANY**

Importers & General Hardware Merchants,

*5, Abdul Jabbar Mawatha,
Colombo - 12.*

*Telephone: 432144
Fax: 580325*

**LUXME'S**

WHOLESALE & RETAIL
DEALERS IN TEXTIELS

*55 - B/7, Third Cross Street,
Colombo - 11.*

**STANDARD STEEL CENTRE**

Importers, Suppliers, General Hardware Merchants, Authorised Dealers
for
Crylon Steel Corporation Products

*303, Old Moor Street,
Colombo - 12*

*Phone: 323151,
(R) 587663, 439454.
Fax: 449258*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகத் தமிழ்

நாடகம் என்பது யாதேனும் ஒரு கருத்தை நடிப்பின் மூலம் புலப்படுத்துவது என்று பொருள்படும். நாடகமானது பண்டைக்காலத்திலிருந்தே தமிழ் மக்களிடையே மிகவும் பிரபல்யமடைந்து காணப்படுகின்றது வெறும் நடிப்புத்தான் நாடகம் என்பது நவநானதாகும். நாடகத்தின் முக்கிய நோக்கு ஏதாவது ஒரு கருத்தை வெளிப்படுத்துவதே ஆகும்.

முத்தமிழ்களுள் ஒன்றாகக் கூறப்படும் நாடகக் கலையானது தமிழ் மக்களிடையே இன்றும் நின்று நிலவி வருகின்றது. மொழி தோன்றுவதற்கு முதலிலேயே நாடகம் தோன்றியிருக்கலாம் என்பது எமது முன்னோர் கருத்து அவ்வாறாயின் மொழி தோன்றுவதற்கு முன் நாடகம் தோன்றியதாயின் அக்காலத்தில் நாடகத்தில் நடித்தவர்கள் எவ்வாறு தமது கருத்துக்களை வெளிப்படுத்தியிருப்பார்கள் என்னும் ஓர் வினா எமது மனதில் எழுகின்றது. இதற்குச் சரியான விடை என்றால் அவர்கள் தமது முகக் குறிப்புக்கள், சைகைகள் மூலம் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள் என்பதாகும். சிலர் தற்போது நாடகங்களை நடிப்பதனால் அதற்கான கதாபாத்திரங்களையெல்லாம் மனனம் செய்ய வேண்டியிருக்கும். ஆனால் பழங்காலத்தைப் போன்று சைகை அசைவுகள், முகக்குறிப்புக்கள் போன்றவற்றினால் கருத்தை வெளிப்படுத்துவது இலகுவானது என எண்ணலாம் ஆனால் இக்கருத்துத் தவறானதாகும் காரணம் தற்போது கதாப்பாத்திரங்களை மனனம் செய்து அவற்றைக் கூறி நடிப்பதனால் நாம் அவற்றிற்கு ஏற்ற வகையில் சைகைகளை உணர்த்திக் கருத்தை வெளிப்படுத்துகிறோம். இதனால் பார்வையாளர்கள் இலகுவில் கருத்தை விளங்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் ஆரம்ப காலத்தில் வெறும் சைகைகளையும், முகக் குறிப்புகளையும் மட்டும் கொண்டு கருத்தை வெளிப்படுத்தும் போது பார்வையாளர்கள் அதனை விளங்குவதற்குக் கஷ்டமாக இருக்கும். ஆகவே அவர்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்கள் என்பதை சற்று எண்ணிப் பார்க்கும் போது மிகவும் வியப்பாகவே உள்ளது.

நாடகக் கதைகளை நாம் புத்தகங்களில் வாசிக்கும் போது, பத்திரிகைகளில் வாசிக்கும் போதும், வானொலியில் கேட்கும் போதும் ஏற்படும் மனோபாவத்தை விட நேரில் பார்ப்பதினால் ஏற்படும் இரசனை அதிகமாகும். இதற்குக் காரணம் நாம் நேரில் நாடகத்தைப் பார்க்கும் போது ஒவ்வொரு கருத்தையும் பல்வேறு முகக்குறிப்புக்கள், சைகைகள் போன்றவற்றைக் கொண்டு வெளிப்படுத்துவதனாலாகும். ஆனால் புத்தகம், பத்திரிகைகளில் வாசிக்கும் போதும், வானொலியில் கேட்கும் போதும் அவ்வாறான சைகை அசைவுகளை நாம் காணமுடியாது. அவ்வாறு காணமுடியாமல் எமது மனதுள் அது பற்றிக் கற்பனை செய்து பார்ப்பினும் நேரில் பார்ப்பதைப் போன்று உணர முடியாது. இதனால் நாடகக்கதைகளை நேரில் பார்ப்பதே மிகவும் சிறப்பானது.

ஆய கலைகள் அறுபத்து நாங்கினுள்ளும் நாடகக் கலையும் ஒன்றாகும். தமிழின் வளர்ச்சிக்கு நாடகக் கலை மிகவும் மகத்தான தொண்டாற்றியது. இன்னமும் ஆற்றிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் இயல்பாகவே பிணிப்புற்று நின்று இன்பம் தருகின்ற இக்கலையை அழித்து விடாது பாதுகாப்பது எமது கடமையாகும்.

ஆக்கம்
**சி. இந்திரவர்மன்**
ஆண்டு 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையின் பாதையில் நின்றொளிக்கும்
## அகல் விளக்கே

எழில் கொஞ்சும் இலங்கையிலே மத்தியில் நின்றொளிக்கும்
மகாவலி தரும் அமிர்தத்திலே தேயிலைச் சுகந்தம் தரும்
அந்தோனியார் அருள் நிழலிலே தஞ்சமென்ற புகல் தரும்
புனித அந்தோனியார் கல்லூரியிலே கொலுவிருக்கும் நாயகனே!

கொழும்பு எனும் நகரில் பிறந்துவளர் அகல் விளக்கே
ஸ்டீபன் ஏப்பிரஹாம் எனும் பெயர் பெற்ற ஒளி விளக்கே
ஆயகலைகள் பல கற்றுணர்ந்த கலை விளக்கே
தமிழ் மொழியின் இனிமை அறி எழில் விளக்கே.

புனித சூசையப்பர் கல்லூரியிலே கல்வியினைத் தானேற்றி
புனிதந் தரும் பாரதத்திலே பட்டதாரியாக தனைமாற்றி
புனித சேவை செய்திடவே அடிகளாய்த் தான்மாறி
புனித அந்தோனியார் கல்லூரியிலே புகுந்த சிம்மக்குரலோனே.

கடமையே கண்ணென்று பள்ளியிலே உயிர் வைத்து
அப்படியே நடக்கவென்று ஆசிரியரை வழிநடத்தி
அவ்வழியே தவறென்று நடப்பவரை தான் அறிந்து
பேசிடுவீர் கடுமையாக பயத்தைத்தரும் தொனியில்.

காலையிலே உம் வரவும் மணியொலியும் சேர்ந்து வர
நுழைவாயிலிலே உம் உருவை ஆசான்கள் காணுகையில்
இதயமோ துடிப்பெடுக்கும் கணப் பொழுதில் அங்கு
கால்களுமோ நடைதளரும் இடம் விட்டு நகர.

லீவு எனும் சொல்லோ வேம்பாகக் கசக்கும் உமக்கு
லீவு என்று நாம் கேட்டால் அனிச்சமென மாறும் உம் வதனம்
லீவு என்று நாம் கேட்டால் பார்ப்பது நீ ஒரு குழந்தை என்பீர்
லீவுதனை நீ எடுத்தால் துன்புறுவது நாலாயிரம் குழந்தை என்பீர்.

எழுத்தறிந்து கலை பயின்ற ஆங்கில மொழித்திறனில்
சொல்வகையும் சொற்றொகையும் சொல் நடையுமுணர்ந்தோன்
ஓர் மொழியில் அறிவென்பது நிறைவில்லை என அறிந்து
ஐம் மொழியில் அறிவு பெற்றீர் உலகானுபவம் அடைய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் அறிவைப் பெறுவதற்கென ஆசான்கள் வந்தால்
பொறுமையாக வழங்குவீர் அறிவுரைகள் கோடி
உம் கடமையை அடிக்கடி நாம் கலைத்தலால்
போடி நீ பைத்தியமென கண்டிப்பீர் துணிந்து.

அடியாதமாடு படியா தென்ற கருத்துடைய நீரோ
சீடனை நற்பிரசையாக மாற்ற தண்டனையை வெகுமதியாக்கிடுவீர்
நன்மையை தீமையெனக் காண் மானிடர் வாழ் உலகில்
இறைவா! ஏன் உமக்கு கொடிய பழி வார்த்தை.

போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும்
என நீரோ சலனமின்றி ஆறுதலும் பெற்றிடுவீர்
ஆனால் உன் நல்லிதயம் அறி கற்றறிந்த ஆசான்கள்
ஐயோ! படும் துன்பம் நீர் அறியீரோ?

வானே தலையில் விழுந்தாலும் விழட்டும்
ஒன்றுக்கும் அஞ்சேன் நான் கடவுளைத் தவிர
இதுவே நீர் அன்புடன் தரும் உபதேசம்
உம் வழியே நாமும் பின் தொடர்வோம் அதனை.

இயல் இசை, நாடகமாம் முத்தமிழை அறி புலவோன்
உம் தமிழ்ப் பணியில் முத்தாக வளர் தமிழ் மன்றம்
உம் வளர்ப்பால் வளர்ந்ததுவே வெள்ளி விழா காண
உம் இழப்பால் தமிழன்னை உதிர்ப்பாளோ சோகமழை.

உன் இழப்பால் தமிழ் மன்றம் தாம் மட்டும் அழுமோ?
தமிழ் பேசும் ஆசான்கள் படும் துன்ப நிலை அறியாயோ
ஆழ்கடலோ, புயல்மழையோ, இடியொலியோ! எதிரொலியோ
உம்பிரிவு
ஐயா! பண்புக்கும் அன்புக்கும் நிகர் இறையே.

இலங்கை திரு நாட்டில் ஓங்கு புகழ் அடிகளாய்ச் சிறப்புற்று
நீர்படைத்த அந்தோனியார் நிழல் வளர்ந்த குருவானவர் பதம்
போற்றி
சமயமென்று மொழியென்று இனமென்று பேதம் ஒழித்த
சிலுவையின் பாதையில் நின்றொளிக்கும் அகல் விளக்கே
போற்றி.

**திருமதி. பானுமதி செல்வநாயகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

# WEERASINGHE TIMBER STORES

*32, Cyril C. Perera Mawatha*
*Colombo - 13.*

# Sevana Steel

Importers, General Hardware Merchants.

*5A, Abdul Jabbar Mawatha,*
*Kandy.*

☎ 449337

# AJANTHA ORGANIZATION

*101, Trincomalee Street,*
*Kandy.*

☎ 25028

# Modern Hardware Centre

Dealers & Stockist of Iron & Steel

*43, Abdul Jabbar Mawatha,*
*Colombo - 12.*

*Tele: 435468, 28614, 436537*
*Fax: 0094-1-431890*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

# NEW VAHINI HARDWARE

No. 36, Peradeniya Road,

Kandy.

Tele: 23113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

**LUCKY TRADERS**

# நிகழ்ச்சி நிரல்

1. மங்களவிளக்கேற்றல்.
2. மன்ற கீதம் :- V. தனஞ்ஜெயன்
3. வரவேற்புரை :- தமிழ்க் கலாமன்ற மாணவ தலைவர்
4. நாமகள் வணக்கம் :- 7ம், 8ம், 9ம், வருட மாணவர்கள்
5. ஆண்டறிக்கை :- தமிழ்க் கலாமன்ற கௌரவ செயலாளர்
6. வாழ்த்துப்பா :- S. ஜனகன்
7. இசையும் கதையும் :- A/L 94 மாணவர்கள்
8. ஒரு நிலவு ஓய்வெடுக்கப் போகிறது.
9. நாடகம் :- 10ம் வருட மாணவர்கள்
10. சேவை நலன் பாராட்டு :- திருமதி. B. செல்வநாயகம்

*With Best Compliments from*

**OSKAR STEEL CENTRE**

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Dealers in Polythene, Stickers, Offcut Board & Paper*

**No. 80 A, Yatinuwara Patu Mawatha,**
**KANDY.**

# கலை விழா '94

11. சுளகு நடனம் :- 5ம் ஆண்டு மாணவர்கள்
12. சொற்பொழிவுகளும், பரிசில்கள் வழங்கலும்
13. செம்பு நடனம் :- 6ம் ஆண்டு மாணவர்கள்
14. நாடகம் :- 12ம் வருட மாணவர்கள்
15. இசை அரங்கம் :- சங்கீத பிரிவு மாணவர்கள்
16. நாடகம் :- 13ம் வருட மாணவர்கள்
17. கோலாட்டம் :- 7ம் வருட மாணவர்கள்
18 நகைச்சுவைத் துணுக்கு :- A/L 94 மாணவர்கள்
19. தேசிய கீதம்.

**140, Maha Vidyalaya Mawatha**
**(Barber Street)**
**Colombo - 13.**

*Tele : 423837, 440843, 449956*
*Tele Fax: 423839*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# Orient Trading Company

*Importers*

*Dealers in:-* Liquid Glucose Food Colour Powders Flavours Papers Essential Oils Bakery Confectionery & Food Industrial Raw Materials.

32 E, St. John's Road,

Colombo 11.

*TEL: 329066*

*FAX: 0094-1-445356*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes

P. KETHESPARAN A/L 94
[Mugunthan]

# Rajah Grinders

MAIN STREET
MAHO

037-45306

Best Wishes

J. Shanmugarasan

ST. JOSEPH'S COLLEGE
Colombo 10

A/L COMMERCE 94

Best Wishes

D. Saravanan

ROYAL COLLEGE
Colombo 7.

A/L COMMERCE 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# METRO STATIONERS

Dealers in: Paper, Office Stationery, Telex/Fax Stationery and Computer Stationery.

25, Maliban Street,
Colombo - 11.

*Tele: 541269, 437134*
*Fax : 94-1-541269*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவன் வருகின்றான், 21ம் நூற்றாண்டிற்கு!

வள்ளுவன் உலகுக்கு தந்த திருக்குறளானது தமிழ் மறை. அளப்பறிய ஞானமும், திண்மையும், தெளிவும், ஆழமும், அகலமும், அழகும் நிறைந்தது. திருவள்ளுவர் தனது பெருமையை போற்றி, புகழ்ந்து விழா எடுத்துச் சிலைகள் செய்து மகிழும் மக்களின் வாழ்க்கை முறையை, யுக வளர்ச்சியை, ஆராய ஆர்வத்துடன் இத்தரணியை வந்தடைகின்றார்.

உங்களுக்கு ஓர் கேள்வி எழும்புகின்றது, திருவள்ளுவரா? எப்படி வந்தார். அது எம் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்ட விடயம். எனவே ஆராய்ச்சியை அத்துறையிற் செலுத்த அவசியம் இல்லை.

வள்ளுவர் தமது வருகையைப்பற்றி முன் அறிவிப்பு ஏதும் செய்யாததால், வரவேற்பு, வாழ்த்துரை, பணமுடிப்பு, பொன்னாடை போர்த்தல், பட்டமளிப்பு போன்ற சம்பிரதாயச் சடங்குகளிலிருந்து தப்பித்துக்கொண்டார்.

புதுமையுகத்தில் வாழும் மக்களை கண்ட திருவள்ளுவர் தம் பழமையான குறளினால் இவர்களுக்கு பயன் இல்லை என்று எண்ணி சில புதுக் குறள்களை பாட எண்ணுகின்றார்.

தாம் தாடியும், காவியுமாக உலகின் முன்வந்தால் தம்மை அறிந்துவிடுவார்கள் என்றெண்ணி தமது உடையை மாற்ற எண்ணி ஒரு துணிக்கடையிற் புகுகின்றார். கடையில் ''டக், டொக், டக் என சத்தம் வருகின்றது என்ன வென்று நோக்குகின்றார் வள்ளுவர். அது டைப்பரைட்டர் என்பதை அறிந்ததும் பிறக்கின்றது முதற் குரல்.

''அகர முதல எழுத்தெல்லாம் அதிவேகத்துடன் ஆக்கித்தரும் நன் ''மெஷின்'' டைப்ரைட்டர்''

கடையிலிருந்து நீற்காற்சட்டையுப், சேர்ட்டுமாக வெளியே வருகின்றார். வெளியே ஒருவர் ''செல்டெல்'' வைத்து உரையாடிக்கொண்டிருப்பதை பார்த்து குறள் பிறக்க சொல்லவும் வேண்டுமா?
''செல்டெல் அதனை வைத்திருப்பானுக்கு சென்ற இடமெங்கும் செலூலர் சேவிஸ்.

வள்ளுவர் நடந்து வருகையில் ஒரு வீட்டில் வானொலி ''அலறுவதை'' காண்கின்றார். மெச்சுகின்றார், ஆதலால் அதனிற்கும் ஓர் குறள் பிறக்கின்றது வள்ளுவரின் வாயில்.

''சிக்குபக்கு ரயிலும், டக் டக்கு நியூசும்.
தரும் நல்வானொலி''

அவர் சற்று இளைப்பாறுவதற்காக ஓர் இடத்தை தேடுதல் பொருட்டு கண்ணை சற்று சுற்றுகின்றார் அப்போது ஓர் நீண்ட ''இண்டர்வியூ'' வரிசை ஒன்றை பார்த்து திகைப்புடனும், துக்கத்துடனும் பாடுகின்றார் ஓர் குறள்.

''கற்றதனலாய பயன் லாலறிவர் நீள்
இண்டர்வியூ கியூவினிலே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *With Best Compliments of*

*S. LAKSA KUMAR (Old Boy)*

Medical Representative

**Harcourts (Private) Ltd.,**

No. 38, 3rd Floor,
Galle Road,
Colombo - 6.

☎ 583719

**VISAKA**
**Supplies (Pvt) Ltd.**

Importers & General Hardware Merchants.

430 C, Old Moor Street,
Colombo - 12.

☎ *437310, 423316.*

**UNION STEEL (PVT) LTD.**

Importers & General Hardware Merchants

34, Abdul Jabbar Mawatha,
Colombo - 12.

Tele: 326492, 434096, 337568.
Fax: 330202.
Tlx: 21583 TELECO CE

**SRI DEVI CHEMICALS**

Wholesale and Retail Dealers in CHEMICALS, BATIK DYES, VAT DYES & ACIDS ETC.

125, Bankshall Street,
Colombo - 11.

Cable: 'GRADUATE'
Phone: 437453, 20314, 432443, 432444.
Telex: 22463 A/B DEVIN CE.

**Ceylon Chemical Suppliers**

**Importers, Wholesalers & Retailers.**

Dyes, Waxes, Acids, Chemicals Etc. For Textiles and Other Industries Colleges, Laboratories, Estates Etc.

136, Wolfendhal Street,
Colombo - 13.

☎ 432117, 435810

**TORRINO STEELS**

Importers & General Hardware Merchants.

39, Quarry Road,
Colombo - 12.

☎ 440955, 324698, 423711

*PR. SOMASUNDERAM*

Organiser For Insurance Corporation of Sri Lanka,

Residence:
28/3A,
Weerakoon Gardens,
Kandy.

Office:
63,
Yatinuwara Vidiya,
Kandy.

**ELMO**

Dealers in: Office Stationery & Suppliers of all your requirements

151/3D, Keyzer Street,
Colombo - 11.

☎ 320030, 526280

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இப்படி வந்துகொண்டிருக்கும் போது சச்சரவுகளையும், சண்டைகளையும், போர்களையும், அணு ஆயுதம் உபயோகிப்பதையும் அறிகின்றார். மனங்குமுறுகின்றார். இவற்றுக்கெல்லாம் ஓர் குறள் பாட எண்ணுகின்றார்.

''சண்டை சச்சரவுகளும் கடும் போர்களுமுடைய இவ்வையகம்
அழிவது வுறுதி''

வள்ளுவர் இவ்வையகத்தை பார்த்து சிந்திக்கின்றார். ''நாம் இவர்களுக்காக மூவாயிரம் குறள்கள் என்ன? முப்பதாயிரம் குறள்கள் பாடினாலும் இவர்கள் இந்த ஜென்மத்தில் திருந்த மாட்டார்கள். என்று எண்ணி தாம் வந்த வழியே திரும்பிச் செல்கின்றார்.

அதோ! யாரங்கே? வள்ளுவரா? எங்கே போகின்றார். அது நம் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்ட விடயம்!

K. விஜயபாபு

ஆண்டு - 10.

# உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

உலகில் உள்ள பிறப்புக்களில் அதியுயர்ந்த பிறப்பே மனிதப் பிறப்பு. மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன். சிந்திக்கத் தெரிந்த - பகுத்து அறிகின்ற அவனது பண்பு பிற உயிரினங்களில் இருந்து அவனை மேன்மைப்படுத்துகின்றது. அதனால் ஆறாம் அறிவாகிய பகுத்தறிவை மனிதருக்கு உரிய சிறந்த அறிவாக அறிஞர் உலகம் வகுத்துக் கொண்டது.

ஐம்பொறிகளின் உணர்வுகளுக்கு உட்பட்ட மனிதனின் மனம், தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் உய்த்து உணரும் வகையில் சிந்திக்கின்றது. தனது வாழ்க்கை - தனது குடும்பம் - தனது உறவு - தனது சமூகம் - தனது நாடு என்ற வகையில் அவனது சிந்தனை விரிவுபடுகின்றது. அந்தச் சிந்தனைகளின் தொகுப்புகள் உயர்ந்த உள்ளக் கருத்துக்களை அவனிடத்தில் தோற்றுவிக்கின்றன. மனித மனம் பண்படுகின்றபோது அவனது சிந்தனைக் கருவூலங்கள் உயர்ந்த நோக்குடையனவாகின்றன. வள்ளுவர் வகுத்த,

''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற நன்நோக்கு அங்கு உதயம் பெறுகின்றது.

உயர்ந்த சிந்தனைகள், ஒருவனை உடையவனாக ஆக்குகின்றன. இலட்சியம் குறிக்கோள் ஒன்றினைத் தோற்றுவிக்கின்றது. அதன் பயனாய் விடா முயற்சி அங்கே வளருகின்றது; ஊக்கம் பெருகுகின்றது. இலட்சியம் நிறைவேறும் போது பெறுகின்ற மனநிறைவு அதிலிருந்து விரிவுபட்ட இலட்சியம் ஒன்றினை நோக்கிச் செயற்படத் தூண்டுகின்றது. இவ்வாறாக, மனித மனத்தில் உருவாகும் சிந்தனை உயர்வுடையதாக அமையுமானால் அது தனித்த ஒருவரை மட்டுமன்றி முழுச் சமுதாயத்தையுமே முன்னேற்றமுடையதாக்க உதவி புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

## APCO TEXX

DEALERS IN TEXTILES

147/20, Keyzer Street,
Keyzer Plaza Super Market
COLOMBO - 11

☎ 435895

## CITY TEX

Importers, Wholesale & Retail Dealers in Textiles, Specialist in Dress Materials.

131, Keyzer Street,
Colombo - 11,
Sri Lanka.

*Phone 430450*

## City Essence House

Dealers in Essence & Perfumes

*68, Dam Street,*
*Colombo 12,*
*Sri Lanka.*

☎ *432639*

## Pushpa Trades

*"ESSENCE HOUSE"*

GENERAL MERCHANTS

Wholesale & Retail Dealers in all Varieties of Essences, Colouring Matters, Bakery Products, Cake Ingredients and Groceries

131, Dam Street,
Colombo - 12

Dial: 436293

## TOP TEN

WHOLESALE & RETAIL DEALERS IN GARMENTS

Super Paradise Market,
122A/5, Keyzer Street,
Colombo 11,
Sri Lanka.

☎ *432792*

## Pratha Trading Co.

*Dealers in Essence Food, Colour Powder Dyes Perfumes, Chemical and Stockists of Raw Materials for Ice Cream Biscuits, Sweets Etc.*

Commission Agents & Importers of All Kinds

*64, Dam Street*
*Colombo - 12.*

☎ *445626*

## Commercial Hardware Stores

*65 & 67, Colombo Street,*
*Kandy.*

*Tele: 34323, 23565*

## Building Developers

*Baithul Haj,*
*Kurugoda,*
*Akurana.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வான உள்ளக் கருத்தானது, மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களின் செயற்பாட்டிற்கும் அடிப்படையாகும். அதனால் பாரதி குறிப்பிட்டது போன்று,

''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்''

என்ற வகையில், ''உள்ளத்து உண்மையொளி'' அவனது வார்த்தைப் பிரயோகங்களை ஒளி உடையதாக்கும். சமூகத்தில் வரவேற்பு உடையதாக்கும். அதனால் மாணாக்கர், அறிஞர், விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகள், அரசியலாளர் போன்ற சமூகத்தின் எப்பாலாரும் கைக்கொள்ள வேண்டிய உயர்ந்த நோக்கு அது. வள்ளுவர் வகுத்த ''யாகாவாராயினும் நாகாக்க'' என்ற நாவடக்கம் பற்றிய எச்சரிக்கைக்கு இந்த இலட்சியவாதிகள் எவரும் அஞ்ச வேண்டியதில்லை.

''மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு'' என்பது உலகப் பொதுமறையின் தீர்ப்பு; நீர் வளத்திற்கேற்ப அதன் பயிர்கள், தாவரங்களின் வளர்ச்சி காணப்படும். அதே போன்று மாந்தரது சிந்தனைகளுக்கும், அதன் பயனான செயல்களுக்கும், மனிதர்களது எண்ணங்களே அடிப்படையாக அமைகின்றன. அவர்களது வாழ்வின் குறிக்கோள்களின் வெற்றிக்கும், புகழுக்கும் அதுவே அடிப்படைத் தத்துவமாகின்றது.

உலகத்தில் பலவகைப்பட்ட சமயங்கள் நிலவுகின்றன. அவை யாவும் மானிடர் உலகில் வாழ்வாங்கு வாழும் வழியைப் போதிக்கின்றன; மனித மனங்களைப் பண்படுத்துகின்றன, சிந்தனைகளை வளம் படுத்துகின்றன; செயல்களைத் தூய்மைப்படுத்துகின்றன. அதன் பயனாகச் சமுதாயத்தை நன்நிலைப்படுத்துகின்றன. இந்த வகையில் பல்வேறு சமயங்களின் தத்துவங்களும் ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருப்பதை உணர முடிகின்றது.

''உலகத்தோடு ஒட்ட ஒழுகல்'' என்னும் சிறந்த பண்பாட்டையும், உயர்ந்த உள்ளக் கருத்துடையவர் பெற்றுக் கொள்ள முடியும். உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே என்பது தமிழிலக்கணக்காரர் கருத்து. உயர்ந்தோர் என்பவர் உலகத்தை வழிநடத்துபவர் பொதுமக்களின் அன்புக்குப் பாத்திரமானவர். பிறரால் பின்பற்றலுக்கு உரித்தானவர் சமுதாயச் சிற்பியாக விளங்குபவர். அகத்தூய்மை காரணமாக தாம் எண்ணியவற்றை எண்ணியவாறே எய்துபவர்.

எனவே ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்ற பெருநோக்குடன் சிந்தனையையும் செயற்பாட்டையும் ஒவ்வொருவரும் தூய்மைப்படுத்தி வாழ்வாராயின், சமுதாயம் சிறப்படையும் என்பதில் ஐயமில்லை.

செல்வன். **நந்தகுமார் தனஞ்ஜெயன்**
12 உயிரியல் பிரிவு.

தூற்றுவார் தூற்றட்டும்; போற்றுவார் போற்றட்டும்
நாம் செல்லும் வழி நேர்வழியாகட்டும். - **கண்ணதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

**JANATHA ENTERPRISES**

127 E, D. S. Senanayaka Vidiya,
KANDY

Tele: 32298

***Sri Murugans***

94, Colombo Street,
KANDY

**CENTRAL MEDICALS**

*92, Dalada Veediya*
*Kandy*

**KRISHNA STORES**

*163, Colombo Street*
*Kandy*

***Hotel Saumiya***

*9, D. S. Senanayake Veediya*
*Kandy*

**ASOKA TEXTILES**

68, Colombo Street,
KANDY

**Mangalaa Jewellery**

68, YATINUWARA STREET,
KANDY

**MURUGANANDAS**

115, Central Market
KANDY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்குமோ மனித நெஞ்சம்?

எங்களில் உயிராகி
எங்களில் உணர்வாகி

தங்களை எருவாக்கி
எங்களை உருவாக்கினீர்

சிந்தனை தெளிவு நல்ல
சீரிய ஒழுக்கம் பண்பு

எந்நேரமும் நெஞ்சத்தில்
பணியை பற்றியே சிந்தனை

தன்னலம் கருதாச் சேவை
சொன்ன சொல் மாறா நேர்மை

பிறந்தவரெல்லாம் ஓர்நாள்
பிரிந்திடல் உலக உண்மை!

இறந்தவரெல்லாம் எம்மை
இப்படி வதைத்ததில்லை

சிறந்தவுங்கள் ஆசிரிய சேவை
சீரிய மனித பண்பு

திறந்தவுங்கள் மனதுக்கெல்லாம்
திடீர் மறைவொன்றே சான்று

பண்பென்ற சொல்லுக்கோர்
பதம் நடராஜா ஆசிரியர் அவர்களே

மாணவர்களன்றி மற்றும்
அனைவரும் புகழ கேட்டோம்

ஐயோ! ஆசிரியை யுங்கள் மறைவை
மறக்குமோ மனிதநெஞ்சம்!

காலங்கள் பல சென்றாலும்
உங்கள் நாமம் மறக்குமா?

R. ஜெயகாந்த்
ஆண்டு - 8 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments of*

*Kandyan Trading Corporation*

Distributors For:
CIC, Duco Dulux, Pentalite
Paints & Hardware

93, D. S. SENANAYAKA VEEDIYA
KANDY.

*T'phone: 08-22616*

**CLOTH CENTRE**

*151, Keyzer Street,*
*Colombo - 11*

☎ 423429, 448056

**FORD MOTORS**

*119/1-9, Prince Street,*
*Colombo 11.*

*Tele: 541238*

**SISIRA MOTOR STORES**

No. 44, D. S. Senanayake Vidiya,
KANDY.

Tele: 08-32559

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறதி

மறதி மன்னன் மன்னார் சாமி
மறந்திடத் துடித்த மறதியால்
உற்றம் சுற்றம் நகையாட
மனையாள் தலையை தாழ்த்திடவே
செய்தான் பற்பல அனர்த்தங்கள்
விளைந்ததுவோ பெரும் மோசம்
தான்

திருமணம் செய்த தினத்தன்று
எடுத்தான் தாலியை கையோடு
மணப்பெண்ணை முற்றும் மறந்திட்
டான்
தாலியை கட்ட விளைந்திட்டான்
அந்தோ மாமியார் கழுத்தினிலே
மீந்ததுவோ மாமன் முறைப்புதான்

அழகு மனையாளுக் குதவிடவே
அன்புடன் தேனீர் தயாரித்தான்
சீனிக்கு பதிலாய் உப்புதனை
கரைத்தான் மிகவும் நேர்த்தியுடன்
கொடுத்தான் மிகவும் வாஞ்சையுடன்
மீந்ததுவோ வெறும் வசையேதான்

பாங்காய் மனைவி சொல்கேட்டு
சென்றான் கடைக்கு குடையுடனே
பையை அழகாய் மடித்துக்கொண்டு
பொருட்களை குடையுள் நுளைத்
துக்கொண்டான்
மழையில் நனைந்தே திரும்பிவந்தான்
விளைவதுவோ வெறும் தடிமல் தான்

கஞ்சன் கருமி மன்னார்சாமி
வீட்டில் பணமதை வைத்திருந்தால்
பாதுகாப்பே இல்லையென்று
பெட்டியை வங்கிக்கு கொண்டு
சென்றான்
பணத்தை வீட்டில் வைத்துவிட்டு
மீந்ததுவோ பிறர் நகைப்புதான்

குழந்தையை தோளில் வைத்துக்
கொண்டு
தேடினான் அதனை அங்குமிங்கும்
பதற்றம் மிகுந்து அழைத்திடவே
உறுதுணை மனையாள் உணர்த்
திடவே
உற்றவள் அருகே அமர்ந்து கொண்
டான்
மீந்ததுவோ பெரும் வெட்கம் தான்

வலப்பக்க மீசையை மழித்திட்டான்
வந்தது பாழும் மறதியே தான்
இடப்புற மீசை தொங்கிடவே
சென்றான் வீட்டின் வெளிப்புறமே
சிறுவர் கண்ணில் பட்டுவிட்டான்
விளைந்ததுவோ பெரும் கூச்சல்
தான்

பஸ்ஸில் சென்றான் ஒருமுறை
அமர்ந்தான் பாவையவள் அருகினில்
வைத்தான் கையவள் தோள்தனில்
பெற்றான் இடியென ஓரறையே
கிர்ரென்று தலையும் சுழற்றிடவே
விளைவதுவோ கன்ன வீக்கம்தான்

சிகரட் பிடிக்க நினைத்திட்டே
எடுத்தான் பெட்டியை கையினிலே
குச்சியை வாயினில் வைத்துக்
கொண்டே
மறுகுச்சால் அதனை எரித்திட்டான்
புஸ்ஸென்று சீற்றம் கிளம்பிடவே
மிந்ததுவோ மீசைச்சாம்பல் தான்

மணமக்கள் வருகை தனைகண்டு
வாழ்த்தும் ஆசை மிகுந்திடவே
சிரிப்புடன் அருகினில் சென்றுநின்று
மணமகன் கரத்தை பற்றிக்கொண்
டான்
என்றான் ''ஆழ்ந்த அனுதாபம்''
மீந்ததுவோ முதுகில்தோசைதான்

இன்னும் பற்பல எழுதிடலாம்
எழுதிமுடித்திட நேரமில்லை
பாவம் மன்னார் சாமியேதான்
அவரால் பிறந்தது கவியடிதான்
அவருக்கோ வெட்கக்கேடேதான்
அதனால் மங்களம் பாடுகிறேன்.

ஆக்கம்:

B. H. M. HAFRETH
ஆண்டு 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *With Best Compliments of*


*Lyon's*
*Peking Palace (Pte) Ltd.*
The Authentic Chinese Restaurant

27, Peradeniya Road,
Kandy.

Tele: 08-23073 & 32248

**ASC Asia Steel Company**
Hardware Merchant & Govt. Suppliers

51/5, Aliyagiya Mawatha
(Behind Silverdale Complex)
KANDY

Tele: 33206, 34032

**New Central Hardwares**
Hardware Merchant and Estate Suppliers
Sanitaryware & Pantry Items

39, Colombo Street,
Kandy

Tele: 08-23242
08-34103

*Rathna Maligai*

48, 50 D. S. Senanayake Veediya,
Kandy.

Dial 08-34438 - 32078

**ABBA TEX**

*188/1 A Keyzer Street*
*Colombo - 11*

Tele: 422138

**SRI AMBIKAI**
**JEWELLERS**
(INSIDE)

*59 A, Sea Street*
*Colombo - 11*

Tele: 324260
433701

**Safe Food**

*31/A, Ekitha Road,*
*Wattala*

**ORIENT TRADING CO.**
AGENTS / IMPORTERS
"Red Heart", Margerine
Cellophane

*91, Galle Road, 4th Floor*
*Bambalapitiya*
*Colombo - 4*

*TE/FAX 580547*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சில சூழலியல் பிரச்சனைகள்

இன்றைய விஞ்ஞான யுகத்தில் சூழலியல் பிரச்சனை தவிர்க்கமுடியாத ஓர் அம்சமாக இருந்து வருகின்ற அதே வேளை அதன் தாக்கத்தில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்பது அத்தியாவசியமாகிவிட்டது. சூழலின் சமனிலை பாதிக்கப்படாமல் இருக்குமானால் அது மனித சுகவாழ்வைப் பேணிப் பாதுகாக்கும் என்பது மருத்துவர்கள் இன்று காட்டி வரும் காரணியாகும். ஆனால் மாறாக சர்வதேச ரீதியாக அனைவரையும் பாதித்து வருவது சூழலியலின் பண்புகள் தமது இயற்கைத் தன்மையில் இருந்து மாற்றமடைவதனால் ஆகும்.

சுற்றுச் சூழலானது மனித குலத்தின் நீண்ட நெடிய பயணத்தில் ஓர் உற்ற நண்பனாக இருந்து வந்துள்ளது. ஆனால் நமது நாட்டில் அண்மைக் காலமாக இந்நிலைக்கு மாறான சம்பவங்கள் நடந்து சூழல் பாதிக்கப்பட்டு வருகின்றது. காட்டுத் தொடர் ஆனது தற்போது வாழ்ந்து வரும் மனிதச் சமுதாயத்திற்கும் எதிர்வரும் யுகங்களில் தோன்ற இருக்கும் சமுதாயங்களுக்கும் உரியது மட்டுமல்ல சூழலைப் பாதுகாக்க இயங்கும் இன்றியமையாதவொரு தொகுதி ஆகவும் விளங்குகிறது. இப்படிப்பட்ட இக்காட்டை எம் நாட்டிலே பெருகிவரும் சனத்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெட்டி வீழ்த்துகிறார்கள். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, சேனைப் பயிர்ச் செய்கை, கட்டிடங்கள், தொழிற்சாலை அமைத்தல் போன்றவற்றிற்காகவும், வீடமைப்புத் திட்டம், குடியேற்றங்கள், கைத்தொழிற் தேவைகளுக்காகவும் ஆகும்.

இவ்வாறு காடுகளை அழிப்பதனாலும், வாகனங்களில் பயன்படுத்தும் எரிபொருள், கைத்தொழில் பக்க விளைவுகள் என்பவற்றாலும் வளியில் $CO_2$ அளவு கூட்டப்படுகிறது. இதனால் பச்சை வீட்டு விளைவு ஏற்படுகின்றது. புவியில் இருந்து உருவாகும் $CO_2$ ன் அளவானது வளி மண்டலத்தில் படிப்படியாக அதிகரித்து வெப்பக்காவலியாகத் தொழிற் படுவதனால் சூரியனில் இருந்து புவியின் மேற்பரப்பில் பட்டுத்தெறிக்கும் வெப்பக் கதிர்களை மீண்டும் புவிக்குத் தெறிக்கச் செய்கின்றது. இதனால் புவியின் மேற்பரப்பின் வெப்பநிலை உயர்வடைகிறது. எனவே நீரின் வெப்பம் பிரிகை காரணமாக துருவப்பனி உருக கடல் மட்டம் உயர்வடைகிறது. இதனால் தாழ்நிலப் பிரதேசங்கள், கரையோரப் பகுதிகள், சிறுதீவுகள் போன்றவை கடலில் மூழ்கும் அபாயம் ஏற்படும். இதற்கு எமது தாயகம் கூட விதிவிலக்கல்ல.

அடுத்து கைத்தொழில் துறையை உற்று நோக்கும் போது, ஏற்படும் விளைவுகள் புலனாகிறது. செங்கற் சூளையிலே தீயிட்டுச் சிறிது நேரத்தின் பின்னர் விரும்பத்தகாத மணம் அங்கிருந்து வருவதை நுகரலாம். மிகவும் நச்சுத் தன்மையுள்ள வாயுக்களில் ஒன்றாகிய புளோரீன் வாயு இதன் போது வெளியேறுகின்றமையே இதற்கு காரணம் ஆகும். வளி மண்டலத்தில் சேரும் புளோரீன் வாயு மழைநீரிற் கரைந்து மண்ணுடன் சேர்ந்து தாவரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

**Sri Ganeshananda Brahmin's Hotel**

*42, Peradeniya Road,*
*Kandy.*

*Tele: 08-23489, 33231*

**SUN ELECTRICALS**

*127B, D.S. Senanayaka Vidiya,*
*Kandy.*

**MERCURY TRADER**

General Hardware Merchants

*126 1/1, Barber Street,*
*Colombo - 13*

*Tele: 438070*

**VARIETIES**

*11, Ambagamuwa Road,*
*Gampola.*

*Tele: 52383*

**Keltron Trading Company**

General Hardware Merchants
& Suppliers

*333 - 2/1, Old Moor Street,*
*Colombo - 12.*

*Tele: 433522*

**CHAMPION TRADERS**

GENERAL HARDWARE MERCHANTS

307, Old Moor Street,
Colombo - 12

☎ 421893

*With Best Compliments of*

*S. KULASEGARAM*

- Tax Consultant
- Professional Photographer
- Field Officer (Union Assurance Ltd)

(Formerly Senior Tax Officer, Dept of Inland Revenue)

*Finefocus*
*87, Peradeniya Road,*
*KANDY.*

*Phone:*
*Res: 08 - 99255*
*Office: 08 - 24169*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையும். இத்தகைய தாவரங்களை உட்கொள்ளும் விலங்கினங்கள் அதிக அளவில் பாதிப்படைவதாக அறியப்படுகின்றது.

மூளையின் விருத்தியின் பெயரால் மனிதன் பூமாதேவியின் வளங்களை நியாயமான முறைகளில் உபயோகித்து மற்றும் உயிரினங்களுடன் இயல்பான நிலையில் வாழ்ந்து பல யுகங்கள் ஊடாக வாழ முடியும். ஆனால் மனித சமுதாயத்தின் தற்போதைய மனப்பான்மையும், நடத்தை முறைகளும் தொடர்ந்தும் நிலைக்குமேயானால் முற்றிலும் அழிந்து போகக்கூடிய நிலைமை உருவாகலாம். மனித இனம் தப்பி வாழ முடியுமா? புவியிலிருந்து மறைய நேரிடுமா? இம் முடிவு எடுக்க வேண்டியது இன்றைய மனிதச் சமுதாயமே ஆகும் மாணவர்களாகிய நாமும் எம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்வதன் மூலம் எம் தாயகத்தினைக் காப்போம். இயற்கை அன்னை வடிக்கும் இரத்தக் கண்ணீருக்கு முடிவு காணுவோம். இனி ஒரு யுகம் செய்வோம். அதனை எந்நாளும் காப்போம்.

P. பிரபாகரன்,

ஆண்டு 10T

❉ ❉

# தமிழன்!

நாடில்லை வீடில்லை
நீ இல்லா,
நாடில்லை - சற்று
உற்றுப்பார்,
நீர் $H_2O$...
மண் SiO
வாயு $CO_2$, $O_2$ ..
கடல் $H_2O$, Nacl
நெருப்பு C, $H_2$, $O_2$ ..
எல்லாம் சேர்ந்திருக்க,
ஆனால் நீ மட்டும்
தனித்திருப்பதேன்???

க. அ. ராஜன்

ஆண்டு - 12 - கணிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## With Best Compliments from

### Pettah Essence Suppliers

Suppliers to Confectioners & Bakers
Importers of allikinds of Food
Colours, Essences, Chemicals,
Groceries Etc.

*18/1, Dam Street,*
*Colombo - 12*

*Phone. 326235, 449269, 434859*
*Telex: 22948 Essen CE*
*Fax: 434859*

### VIJAYA'S

Wholesale & Retail
Dealers in Textiles

*Super Paradise Trade Centre,*
*124 - 68, Keyzer Street,*
*Colombo - 11.*

☎ 432837

### Stelco Steel Centre

Importers & General Hardware
Merchants.

*10E, Quarry Road,*
*Colombo - 12.*

*Tele: 433522, 434216*

### BRILLIANT TEX

(SOUTHA MARKET)

Wholesale & Retail
Dealers in Textiles.

*55A/8, 3rd Cross Street,*
*Colombo - 11.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்த துவீபம்

இரத்தின துவீபமாம்
இரத்தத்திற்கு பஞ்சமேது?
இந்து சமுத்திரத்தின் நித்திலமாம்
இரக்க சொல்லின் பொருள்
தெரியாது

தேயிலைக்கு பெயர் போன நாடாம்
தேவையோ இந்த யுத்தம்?
தன்னிறைவு பெறாவிடினும்
தலைகள் உருளுவது நிற்கவில்லை

புலிகளுக்கு வடபகுதியாம்
புரளி பண்ணும் அரசாங்கத்திற்கு
தென்பகுதியாம்
இரண்டு பேருக்கும் வேண்டுமென்
றால்
இறைவன் தான் வழிவிடவேண்டும்

இலங்கையில் ஓடும் ஆறுகள் வற்றி
னாலும்
இங்கு ஓடும் இரத்தம் வற்றாது
தேன் போன்ற இந் நாட்டை கலக்கி
தேவையில்லாமல் கசக்கிப் பிழிகி
றார்கள் பாமர ஜனங்களை

ஞா. பாலச்சந்திரன்
ஆண்டு 9

## பே(ா)தை!

போதையே
இந் நூற்றாண்டின்
மாசற்ற கலப்படம் அற்ற
மனதில் கள்ளம் கபடம்அற்ற
ஒரே பொருள் நீ
உன்னை கோடி விலை கொடுத்து
வாங்குவோருக்கு வஞ்சனை செய்
யாது
உன்னால் இயன்ற அதியுயர்
பலனை உடனடியாக
அளிக்கின்றாய்
ஆனால் ஒவ்வொரு தாக்கத்திற்கும்
சமனானதும் எதிரானதுமான
மறுதாக்கம் உண்டென
நியூட்டன் கூறியதை நீயறியாய்
ஆனால்
இயற்கை அறியும்
அதனால் தான்
தன்னைத் சமநிலைப்படுத்த
உன்னை
இன்பம் என்று பாவிக்கும்
மனிதனுக்கு
அதன் எதிர்ப்பதத்தை
உடனடியாக உணர்த்தும்
பொருட்டு
அவனை
தன்னுடன் மிக மிக மிக . . .
விரைவில்
ஐக்கியப்படுத்திக் கொள்கிறது.

T. GANDEEPAN
ஆண்டு 12 கணிதம்

நீர்க்குமிழி போன்ற வாழ்க்கையில் நேரம் பொன்னுக்குச் சமனானது. எனவே அதிகம் சொல்லில் சாதனை புரியாமல் செயலில் சாதனை செய்ய முயலுங்கள். ஏனெனில் அதுவே நீங்கள் மறைந்த பின்னரும் நிலைக்க வல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயல்

கண்ணிரண்டும் போன பின்பு
கயலென்று அழைப்பதும் ஏன்?
புண்பட்ட நெஞ்சம் புலம்பி
அழுகிறது
பூமியிலே பிறந்த பயன் ஏதுமில்லை.

பகலென்பார் இரவென்பார் உண்
மையா?
புரியவில்லைத் தாயே ஒன்றும்
பரமன் எனைப் படைக்கவில்லை
யெனில்
பாரம் உனக்குக் குறைந்திருக்கும்.

பூக்களெல்லாம் அழகாமே அவை
பலவர்ண நிறமாமே
ஆட்களெல்லாம் கதைக்கும்போது
அதைப் பார்க்க இயலவில்லை.

பட்டுச் சட்டை என்றால்
பளபளப்பாய் இருக்குமாமே
தொட்டுப்பார்க்கக் கொள்ளை ஆசை
தெய்வமே கண்ணைத் தந்துவிடு.

குருட்டுப் பெண் பாவமென்று
கோதை மாமி தந்த காசை
திருட்டுப் பயல் பறித்து விட்டான்
தேடி ஓட முடியவில்லை.

இம்மாநிலத்தில் நான்செய்த பாவ
மென்ன?
ஈன்ற உன்னைப் பார்த்ததில்லை
அம்மா நான் பாவி அழுகிறேன் கதறி
ஆதரிப்பார் யாருமில்லை.

ஆக்கம்:
M. J. P. கிறிஷாந்தஸ்
ஆண்டு 12
(உயிரியற்பிரிவு)

## சூரியனின் கோலம்

காரிருளை விரட்டிட கதிரவன் விரைந்திடவே
காகங்கள் கரைந்து சேவல்கள் கூவி
அவனை வரவேற்றன.
வந்தவன் கண்டான் உலகின் அவலங்களை
சகிக்க முடியாமல் குதித்தான் கடலினுள்ளே,
காலங்கள் சென்றதால்
அவலங்களும் சென்றிருக்கும் என்றெண்ணி
உதித்தான் மீண்டும் மறுநாள் காலை
ஆனாலும் பழைய படியே உலகம்
மீண்டும் மறைகிறான் மீண்டும் உதிக்கிறான்
என்னே ஏமாற்றம் எந்நாளும் இக்கோலம்
காலை வருவான் மாலை செல்வான்
பாவம் அவன்
உலகில் வாழ்வது மனிதனென்று அறியானோ.

அஹமட் முஸ்னி
ஆண்டு 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'

பிரகாஷ் தந்தையற்ற ஒரு ஏழைச் சிறுவன். மிகுந்த இன்னல்களின் மத்தியில் அவனது தாய் அவனைப் படிக்க வைத்தாள். பிரகாஷ் தான் ஒரு வைத்தியனாக வரவேண்டுமென்ற உறுதியுடன் கற்றான். பாடசாலையிலுள்ள எல்லா ஆசிரியர்களும் அவன்மீது அன்பு வைத்தனர்.

அவனுடைய வகுப்பில் சுரேஷ் என்ற பணக்கார மாணவனும் கல்விகற்று வந்தான். அவனிடம் பல தீய குணங்கள் காணப்பட்டன. அவன் படிப்பதே யில்லை. சரியாக எழுதவும் வாசிக்கவும் அவனால் முடியவில்லை. பிரகாஷ் எல்லா பரீட்சைகளிலும் முதல் மாணவனாக சித்தியடைந்தான். எல்லோராலும் போற்றப்பட்டான். ஆனால் சுரேஷோ கல்வியை வேம்பாக எண்ணி ஒதுக்கி னான். பிரகாஷின் வெற்றியைக் கண்டு பொறாமையடைந்தான். பிரகாஷ் வருந்தக்கூடிய வகையில் அவனுக்கு இன்னல்களை ஏற்படுத்தினான்.

காலம் உருண்டோடியது. பிரகாஷ் தன் தாயை இழந்தான். யாரு மற்ற அனாதையானான். அவ்வேளை அவன் கல்விகற்ற பாடசாலை அதிபர் அவனுக்கு கைகொடுத்து உதவ முன்வந்தார். அவன் அதிபரின் பராமரிப்பில் வளர்ந்தான். நன்றாகப்படித்து வைத்தியனானான். ஆனால் சுரேஷ்! காலக் கிரமத்தில் தனது பெற்றோரை இழந்தான். அனாதையானான். எண்ணை யும் எழுத்தையும் சரிவரக் கற்காத காரணத்தால், தந்தையின் வியாபாரத்தை அவனால் சரிவரக் கவனிக்கமுடியாதுபோனது. பலரால் அவன் ஏமாற்றப்பட் டான். சொத்தை இழந்தான்! ஏழையானான், உண்ண உணவும் உடுக்க உடையு மின்றி வருந்தினான். அப்போது தான் அவன் படிப்பின் மகிமையை உணர்ந் தான். ஆனால் என்ன பயன்?

படித்தீர்களா சகோதரர்களே இந்தக் கதையை! நாமும் பிரகாஷ் போல எண்ணையும், எழுத்தையும் இரு கண்ணென மதித்து உயர்ந்த வாழ்வு வாழ்வோமாக.

பிஷ்ருல் அகமட்
ஆண்டு 7

---

## அந்த உருவம்?

நடுக்காடு ஒரே இருள்மயம், அடர்ந்தகாடு மட்டும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நான்மட்டும் தனியாக நடந்து கொண்டிருக்கின்றேன். பயமாக இருந்தது ஏதோ உறுமல்களும், இரைச்சலும் மட்டுமே கேட்டுக் கொண்டிருந் தது. பாதையும் தெரியவில்லை தூரத்தில் ஏதோ விளக்கு போல் இரு ஒளித் துளிகள் தெரிந்தது. யாரோ வருகிறார்கள் என்றெண்ணித்தான் அதனை ஓர் ஆதரவாக நோக்கி சென்றேன். அந்த ஒளியும் என்னை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது என்னை அது நெருங்கும் போதுதான் தெரிந்தது அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிகள் ஓர் பயங்கர இராட்சத உருவத்தின் கண்கள் என்று. உருவமும் என்னை நோக்கி வேகமாக வருவதையும் உணர்ந்தேன். மிக அருகில் வந்துவிட்டது. எனக்கோ தப்பி ஓட வழியில்லை பதுங்க நினைத்தேன் அந்த உருவம் ஒரே எட்டில் பாய்ந்து என்னைப் பற்றிக் கொண்டது அம்மா . . . அம்மா என்று அலறினேன் அப்போது அம்மா என்னருகில் நின்று மகனே கனவு கண்டாயா என்று கேட்டு என்னை தடவிக் கொண்டிருந்தார். நான் அப்போது தான் கண்டது கனவு எனப் புரிந்து கொண்டேன். கனவுதான் என தெரிந்தும் பயம் நீங்கவில்லை.

P. லெனாட்
ஆண்டு 7

# இதுவொரு வித்தியாசமான விவாத அரங்கு

கொடுமையில் மிக்காள்

**கைகேயியா? சூர்ப்பனகையா?**

இராமாயாணக்காப்பியத்திலே ''கைகேயி சூழ்வினைப்படலம்'', ''சூர்ப்பனகை சூழ்ச்சிப்படலம்'' என்ற இரண்டு படலங்களே கதையின் திருப்புமுனைகளாக விளங்குகின்றன. இராமாவதாரத்தின் நோக்கம் நிறைவேறக் கைகேயியும், சூர்ப்பனகையுமே காரணமாக விளங்குகின்றனர். தசரதன் மாளவும், பரதன் ஆளவும், இராமன் காட்டிற்கு ஏகவும் காரணமாக அமைபவள் கைகேயி. இராவணன் முதலாய அரக்கர்கள் அழிவதற்கு அடிப்படைக் காரணமாக அமைபவள் சூர்ப்பனகை. இவர்களில் கொடுமையில் மிகுந்தவள் யார்?

**சூர்ப்பனகை**

இலங்கைவேந்தன் இராவணனின் தங்கை சூர்ப்பனகை உடன்பிறப்பே ஆயினும் உட்பகை கொண்டவள். இராவணனுடன் பிறந்து, இராவணனுடன் வளர்ந்து இறுதியில் அவனையே சூழ்ச்சிவலையில் சிக்கவைத்து அவன் உயிருக்கே எமனாக அமைந்தவள். இவ்வாறு இராவணனைச் சூழ்ச்சி வலையில் சூர்ப்பனகை சிக்கவைத்ததற்கும் ஒரு காரணமுண்டு. ஒரு முறை இராவணன் உலாவரும்போது சூர்ப்பனகையின் கணவனைக் கொன்றுவிட்டான். தன் கணவனை இராவணன் கொன்றதற்காக, அவனைப் பழிவாங்க வேண்டுமென்று சூழ்ச்சி செய்து, இராவணனிடம் சீதையைப் பற்றிக் கூறிக் காமத்தீ மூட்டிப் பழி தீர்த்துக்கொள்கிறாள் சூர்ப்பனகை. தன் உற்றம், சுற்றம் யாவுமே அழிவதற்கு சூர்ப்பனகையே காரணமாக அமைகின்றாள் என்பதைக் கம்பர்

''தன் கிளைக்கு இறுதி காட்டுவாள்''

என வர்ணிக்கின்றார். அவளே இராவணவதத்திற்கு மூல காரணம் என்பதைக் கம்பர்

''நீல மாமணிநிற நிருதர் வேந்தனை
மூல நாசம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்''

என்று குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப் போக்கில் சூர்ப்பனகை தோன்றி இராவணனைச் சூழ்ச்சியால் எழுச்சி பெறச் செய்யாதிருந்தால் இராமகதை தண்டகாரண்யத்தோடு முடிந்து போயிருக்குமே. நம் இலங்கைவரையில் நீண்டிருக்காதே. இராவணன் வதைக்கும் வழியும் பிறந்திருக்காதே. ஆகவே ''சூர்ப்பனகை சூழ்ச்சிப் படலம்'' இராமாயணத்தின் முதுகெலும்பாக, திருப்புமையமாக, மூலநாடியாக விளங்குகின்றது.

தன் உடன்பிறந்த அண்ணனையே சூழ்ச்சி வலையில் சிக்கச் செய்து இராவணவதத்தை முடித்துவைக்கிறாள் சூர்ப்பனகை. ஆனால் அது கொடிய செயல் ஆகாது. இராவணன் தவறிழைத்தவன். தவறிழைத்தவர்கள் தண்டனை அடைவது கொடுமையன்று, அதுதான் உலகநியதி. ஆகவே இராவண வதத்தை முடித்து வைத்த சூர்ப்பனகை கொடுமைமிக்காள் என்று கூறுவது பொருந்தாது. சூர்ப்பனகை கொடும் சூழ்ச்சி செய்தாலும் அவளது சூழ்ச்சியால் ஒரு கொடியவன் தண்டனை பெற்றான் என்றால் சூர்ப்பனகை கொடுமை மிக்கவளேயல்ல.

**கைகேயி,**

தசரதனின் இரண்டாம் மனைவி கைகேயி; அவனது பேரன்பிற்கு உரியவளாய் இருந்தவள். ''மாசறு கேயன் மாது'' என்று கம்பராலே பாராட்டப்படும் கைகேயி இயல்பிலேயே மிகவும் நல்லவள். ஆனால் மந்தரையின் சூழ்ச்சியினால் மனம் மாறுகின்றாள் அவள். கைகேயியின் மனமாற்றமே காப்பியத்தின் மற்றுமொரு திருப்புமுனை, தன் சக்களத்தி பெற்ற பிள்ளை என்ற வேற்றுமை உணர்வின்றி இராமனிடம் மேலான பாசங் காட்டி வளர்த்தவள் கைகேயி. கூனி தோன்றி உனக்கு ஆபத்து வரப்போகிறது என்றபோது, ''இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ?'' என்றவள் கைகேயி, அவனுக்கு முடிசூட்டுவிழா என்றதும் முத்துமாலையைப் பரிசாகத் தந்தவள்; கோசலை வாழ்ந்தாள், நீ தாழ்ந்தாய் என்று கூனி கூறியபோது கூனியின் நாக்கை அறுக்கவும் துணிந்தவன்.

> ''பரியும் நின்குலப் புதல்வதற்கும்
> உனக்கும் இப்பார்மேல்
> உரியதென்? அவள் உதவிய
> பொருள் அலால்''

என்று கூனி கூறிய பிறகுதான் கைகேயியின் மனம் மாறத் தொடங்குகின்றது' தன்நிலை தாழ்ந்து போகும் என்றதும் அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இராமன் முடிசூடினால் தன் சிறப்பையும், பதவியையும், செல்வாக்கையும் இழக்க நேரும் என்று கொண்ட கருத்தே கைகேயியின் குணத்தை மாற்றுகிறது.

ஷேக்ஸ்பியரின் கிளியோபாட்ரா, கடைசியில் தனது சுதந்திரம் போனதைக் குறித்து வருந்தவில்லை. உரோமாபுரியின் தெருக்களிலே கைதியாகத் தன்னை இழுத்துச் செல்லும்போது, தன் மாற்றானான ஆக்டேவியா தன்னை இகழ்ச்சியுடன் நோக்கும் பார்வைக்கே அவள் அஞ்சினாள். அவ்வாறே கைகேயியும் கோசலை முன் தன் நிலை தாழ்ந்துபோகுமே என்று அஞ்சுகிறாள். பதவி மோகத்தால் ஏற்பட்ட மாற்றமே கைகேயியைக் கொடியவளாக மாற்றுகிறது. கிளியோபாட்ரா தன் உயிரை இழக்கத் துணிந்தாள். கைகேயியோ தன் கணவனையே இழக்கவும் துணிகிறாள். ''என் மகன் இராமன்'' என்றவள், பதவி வெறி தலை தூக்கியதும் ''சீதை கேள்வன்'' என்கின்றாள். கோல்பிடித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களால், தசரதன் அவள் கால் பிடித்துக் கெஞ்சியபோதும் தன் வரங்களில் பிடிவாதமாக இருக்கிறாள் கைகேயி.

அயோத்திக்குத் திரும்பிய பரதன் கைகேயிடம் இராமன் காடேகக் காரணம் வினவும்போது தான் ஒன்றும் செய்யாதவள் போல், எல்லாத் தவறுகளையும் தசரதன் மேல் ஏற்றிச் சொல்கின்றாள் கைகேயி. ''அரசு உனக்குக் கிடைப்பதைத் தசரதன் பொறுக்கவில்லை'' என்கின்றாள். தன் எண்ணம் நிறைவேறுவதற்காகச் சாகசத்தால் அடுக்கடுக்காகப் பொய்சொல்லவும் துணிந்து விடுகிறாள் கைகேயி.

கைகேயி கொடியவளாக மாறியது குற்றமன்று. தன் கொடுமைகளை எண்ணி வருந்தித் திருந்தாமல், இறுதிவரை கொடுமையிலேயே நிலைத்து நின்றாள். அதனால் தான் பரதனே ''பழிவளர்த்த செவிலி'' என்று கைகேயியைப் பழித்து உரைக்கின்றான். பொய், சாகசம், பிடிவாதம், பொறாமை, நீலிக்கண்ணீர், போலிக்கோபம், தன்னலம், மண்ணாசை போன்ற பல பாவங்களைச் செய்யும் கொடியவளாக மாறிவிடுகிறாள் கைகேயி. பதவி வெறியே இத்தகைய கொடுமைகளையெல்லாம் அவள் செய்யத் தூண்டுகிறது. கொடுமையில் மிக்காள் யார்?

தவறிழைத்த அரக்கர்களின் அழிவுக்குக் காரணமானவள் சூர்ப்பனகை ஆனால் நல்லவர் பலரது துன்பங்களுக்கு காரணமானவள் கைகேயி. இராவணவதத்தைவிட, ஒரு குற்றமும் செய்யாத இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று கைகேயி கேட்டவரமே மிகமிகக்கொடுமையானது. கைகேயியின் வரத்தால் ''அயோத்தியா காண்டமே'' அவலக்காண்டமாக மாறுகிறது. கம்பரின் கவிதையில் கூட கைகேயியே கொடுமைமிக்கவளாகக் காட்சி அளிக்கிறாள். சூர்ப்பனகையைக் கம்பர்,

''பொய் நின்ற நெஞ்சிற் கொடியாள்''

என்று ஒரேயொரு இடத்தில் தான் கொடியவளாகக் கூறுகிறார். ஆனால் கைகேயியைக் கம்பர் காப்பியத்தின் பல்வேறு இடங்களில் கொடியவள் என்று சுட்டுகிறார். ''தீயவை யாவையினும் சிறந்த தீயாள்'' என்று முடிவு கூறிக் கொடுமை மிக்காள் கைகேயியே என்று கம்பரே தீர்ப்பளித்து விடுகிறார்.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் ஒன்று சொல்லிவிட்டால் அதற்கு எதிர்க் கருத்து சொல்ல யாராலும் முடியுமா? ஆகவே சூர்ப்பனகையிலும் கொடுமை மிக்காள் கைகேயியே.

(இனிக்கும் இலக்கியம் நூலிலிருந்து தொகுத்தது)

தொகுப்பு;

ஷக்தி

❖ ❖ ❖

ஒருவனது வார்த்தைகள் உன் மனதை புண்படுத்தினால், அதே வார்த்தைகளை நீ கூறும் போது அவனது மனதைப் புண்படுத்துகிறாய் என்பதை மறவாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRAVEL TO கணணி WORLD

மின்னல் மின்னி விளக்குகள் போல் ஒளி செய்ய, இசையென இடியும் முழங்க தென்றலானது நறுமணம் சுமந்துவர விண்ணிலிருந்து வெள்ளிரதம் போலொன்று இறங்கிக்கொண்டிருந்தது. ஆ என்ன வெள்ளி நிறத்திலந்த விண் னோடம் இறங்கிக் கொண்டிருந்தது. பசும் நிலத்தின் பேரிரைச்சல் கிளப்பாது அது தரையிறங்கியது. அதிலே 'Travel to கணணி World என' எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அது தரையிறங்கியதும் அதன் திருவாயில்கள் தருணம் பார்த்து தானாக தான் திறக்க பயணிகள் போட்டி போட்டுக்கொண்டு இறங் கிக்கொண்டிருந்தார்கள். ஒருவர் விழுந்தும் விட்டார். யார் இவர்கள்?

என்ன? வள்ளுவர், ஔவையார், இளங்கோ, புகழேந்தி வில்லி, மனு பாரதி என்று பலர் இறங்கியிருந்தனர். இவர்களுடன் தாசன். . கண் கண். . கண்ணதாசனும் கூடவே, அவர்களுள் ஒருவர். அண்மையில் எம் விண்ணுல குக்கு வந்தவர் யாராயினுமொருவர் முன்னே நடக்க வேண்டும் என்றார் அதன் படி கண்ணதாசன் முன்னே நடந்தார்.

விண்ணுலகினருக்கு திடீரென ஒரு ஆசை பாருக்கு வந்து மக்கள் எவ் வாறு வாழ்கிறார்கள் தங்கள் அறிவுரைகள் எவ்வாறு இவர்களிடையே நிலவுகின்றது என்று அறிவது அதன் படி Trip ஏற்பாடாகியது அவர்கள் அவ னியை அடைந்தார்கள்.

வந்த பயணிகளின் ஏகோபித்த வேண்டுகோளின்படி உலகிற்கு உண வூட்டும் கழனிக்கு சென்றனர் அங்கே உழவர் இயந்திரங்கள் மூலம் உழுது கொண்டிருந்தார்கள். இன்னோர் பகுதியில் அறுவடை இயந்திரங்கள் மூலம் நடந்துகொண்டிருந்தது கண்டார் வள்ளுவர்.

சுழன்றும் Agromate பின்னது உலகம் அதனால் தளராது அதன்
Company Products. என இயற்றினார் ஒரு குறட்பாவை.

காததூரம் செல்லுகையில் உழவு மாடுகள் கசாப்பு கடைவாயில் இருக் கக் கண்டு,

''பகுத்துண்டு பலர் மகிழ்தல்
உலகத்து கசாப்புக் கடைக்காரர் தலையாய கடன்'' என பாடினார்

இதன் பின் அனைவரும் மன்னுயிர்க்கு வரும் பிணியகற்றும் வைத்திய சாலைக்கு சென்றனர். ஒரே கூட்டம் அங்கு, Aids நோயாளர் பலர் படுத்து முனங்கிக் கொண்டிருந்தனர் கட்டிலில். இதைக் கண்ணுற்ற ஔவை

''அம்மி துணையாக ஓடம் தவிர்த்து
ஆற்றை கடப்பவன் போலவே
இம்மனிதர் மனைவிதவிர்த்து Red Light Area
செல்லுங்கால் வருந்தி மாழ்வர் Aids இனால்''

என்று நல்லுரைக்கு New பாவொன்றைப் பாடினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வண்ணம் பல்வண்ண காட்சிகளை கண்டவாறு Pop இசையொலி கேட்க நின்று அவதானித்தனர் அவ்விடத்தில் பெரிய வீடு PARTY வீடு என்று கவிஞர் கூறினார். பல வண்ண கார்களங்கே இருந்தன. வள்ளுவர் இதைக் கண்டு

''வானுயர் தோற்றம் ஒருவற்கு எது தருமெனில் Benz

வாகனம் தானெனல் தகும்'' என்று குறள் பாட பலரும் அம்மாளி கையினுள் சென்றனர். அங்கே பலர் குடியும் கும்மாளமுமாய் இருந்தன. இதைக் காண சகிக்காத வந்தவருள் ஒருவர் குடிப்பவனைக்கண்டு தம்பி கள் உண்ண லாகாது என வள்ளுவர் கூறியுள்ளார் அல்லவா என்றார் ''வள்ளுவனாவது பல்லவனாவது கதைத்தால் பல்லுடைத்திடுவேன்'' என்று உரக்க கூறினார். இதைக்கேட்ட வள்ளுவனார் வந்தவரிற்காக பரிந்து

''உன்னற்க கள்ளை என்றியம்பி உதைவாங்க
என்னற்ற எவனொருவன் மதுவிடம் மயங்கியவனிடம்''

என்று குறள் கொடுத்தார்.

பின் அனைவரும் அவ்விடம் விட்டகன்று செல்லும் வழியில் ஒருவன் Celltel கொண்டு 'அன்பே உனைக்காணாது இருக்க இயலவில்லை' என காதலியிடம் பேசிக்கொண்டிருந்தான். அப்போது புகழேந்தி

அக்கால நளன் புகழ் நவின்றிடுமே
நல்லன்னம் தமயந்திக்கு
இக்கால நளன்மார் புகழ் Celltel தாங்கும்
கைகண்டு உணர்வாரே தமயந்திமார்.

என்று பாடி நின்றார்.

இன்னோரிடத்தில் ஆண்கள் பலர் வருவது கண்டு என்னே இவர்களது உடை என்று புலவர் ஒருவர் வியக்க இளங்கோ ''புலவரே பெண்குரல் கேட்கிறதே என்றார்'' கவிஞர் க. இது தான் இன்றைய நங்கையர் Fashion என்று கூறினார் இதைக் கேட்ட அடிகளார்

''இக்கால கண்ணகியர்
கோவலன் கொலையுண்டகால்
மதுரையை எரியச்செய்கையிலே - பூங்
குழலை கார்மேகமென பரவவிடுவரே'' என்று கவிபாடிய வாறு அப்பால் சென்றார்.

அவர்கள் சுற்றுப்பயணம் செய்தவாறு வருகையிலே தொலைகாட்சி முன் பலரமர்ந்து பலகாட்சி கண்டு இரசித்திருந்தனர். இதை கண்ட வள்ளுவர்'

''காலத்தினால் வந்து Television செய்த உதவி
ஞாலத்தின் கண் வாழுமுயிர்க்கு நவிலத்தான் இயலுமோ?

என்று பாடினார்.

பின் யாவரும், மக்கள் உணவிற்காய் Q இலே நிற்பதைக்கண்டனர். அகதி முகாமென பெயர்ப்பலகை பொறிக்கப்பட்டிருந்தது. வள்ளுவர் மனம் நிலை கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உணவென்ப ஏனைய உறையுளென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் அகதிகளுக்கு'' என்று கூறி குறள் பாடிவிட்டு இதற்கு காரணம் என்னவென சிந்தித்தவாறு நடந்தார். இன்னு மோரிடத்தில் குண்டுவீச்சு விமானங்கள் 'சொய்ங்...' என்று பறந்தன. செல்லடிகள் பெருமளவில் விழுந்தன. ஏவுகனைகள் வானத்தில் பல திசைகளில் பறந்தன. ''அருச்சுனன் இங்கே வந்து விட்டானோ'' எனும் வில்லி வியந்து கூறினார்.

இவ்வாறு இவ்வுலகின் விந்தை பல கண்டு வியந்து யாவரும் தங்கள் விண்ணோடம் இருந்த இடத்தையடைந்தனர். தங்கள் விண்ணோடத்தில் Light Lamps பல காணாது போயிருக்க என்னவுலகம்? என்றவாறு ஏறிக் கொண்டனர் ஓடத்திலே. அது Hypersonic விமானமென வானில் பறந்து மறைந்தது.

என்ன இன்னும் தூக்கம் உனக்கு தலைவலி அதனால் தூங்குகிறாய் என்று உன்நண்பர்கள் கூறினார்கள் இப்போது எப்படி'' என்று ஆசிரியர் வினாவினார்.

இல்ல Sir எனக்கு தலைவலி எல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்திருக்கையில் எனக்கு தூக்கம்வந்ததே தெரியவில்லை Sir,

Sir; என்ன சொன்னாய்? . . .

ஆக்கம்: R. **ஆனந்தகிருஷ்ணன்**
A/L 94 (உயிரியற்பிரிவு)

## "கருவறைக் கண்ணீர்"

உறவே தள்ளாடுது - நெஞ்சம்
நாம் மண் மீது வாழ்வது கொஞ்சம்
கண்ணீரை சிந்தாதே - என்
உள்ளம் தாங்காதே

கருவில் இருக்கையில்
கண்மூடிக் கிடந்தோம்
பிறந்தும் உறக்கமா?
இருந்தும் மயக்கமா?

வாழ்க்கை ஒன்றும் இங்கே தூர
மில்லை
வாழ்ந்து பார்த்தால் அது பார
மில்லை
வாழ நினைப்பவன் இங்கு காளை
வாழ மறுப்பவன் இங்கு கோழை.

மறையும் கதிரவன்
மறுநாள் தெரியும்
எதற்கும் முடிவில்லை
எதற்கும் அழிவில்லை.

ஊனம் ஒன்றும் பாவமில்லை
வாழ்வதொன்றும் சாபமில்லை
நானும் வேறென்ன சொல்ல
வாழ்க்கைப் போரில் - வெல்ல

உறவே தள்ளாடுது - நெஞ்சம்
நாம் மண் மீது வாழ்வது கொஞ்சம்!

''வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்'' என்று கவி பாடினான் அன்றொரு கவிஞன் ஏன்? மானுட வாழ்க்கை மனோரம்மியமானது! வாழ்க்கை என்ன புற்றீசலா பிறந்தவுடன் இறப்பதற்கு? ஆயிரம் பிறவி எடுத்தாலும் மனிதனாய் பிறக்க மாதவம் செய்யவேண்டும்.

ஆக்கம்: **சண்முகம் சிவபாஸ்கரன்**
ஆண்டு 12 உயிரியற் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல கொடுங்களேன்

சாஞ்சி மலயில
கவ்வாத்து வெட்டப் போயி,
அப்பாவுட்டு காலயும்
சாமி ஒடச்சிரிச்சி

கொழுந்து பறிக்கப்போன
அம்மாவும்
கங்காணி மாமாவோட
ஓடிப்போயிரிச்சி

நோயால
அம்மாயியும்
பாயில படுத்திருச்சி

தங்கச்சிட
ஸ்கூல் போற
உடுப்பும் கிழிஞ்சிரிச்சி

அப்பாவுக்கு
மருந்து கட்டணும்,
அம்மாயியுட்டு
மருந்தும் முடிஞ்சிரிச்சி

நானும்
வயித்த நலச்சி
மூணு நாளாயிரிச்சி

தொர . . .
எனக்கு
வேல கொடுங்க
தொர தொர . . .
எனக்கு ஏதாவது
வேல கொடுங்க.

- கலகெதர உனைஸ்

# தாழ்வுறும் சமுதாயமும் தட்டியெழுப்ப தோன்றும் வீரர்களும்

நாம் நமது எதிர்காலத்தை எண்ணிப்பார்த்தால் தமிழ் என்ற மொழி இருந்தது என்றுங்கூடத் தெரியாமல் போய்விடும் அளவிற்கு நம் தமிழ் சமுதாயம் வரவர அழிந்துகொண்டே போகிறது. உலகிலுள்ள சிறந்த மொழிகளில் தமிழும் ஒன்றாகும். சிறந்த தமிழ் மொழிக்கு ஏன் அழிவு ஏற்பட வேண்டும்?

இராவணன் இலங்கையை ஆண்ட காலத்தில் தமிழ் வளர்ந்திருந்தது. அக்காலத்து அரசர்கள் சாதிமதபேதமே பார்க்கவில்லை. ஆதலால், மக்கள் தமது சமுதாயத்திற்கு அழிவுவராது என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்தார்கள். ஆனால், தற்போது சாதிமத பேதம் தாண்டவமாடுகிறது. முற்காலத்தில் தமிழ் இடையிடையே குன்றியது; அழியவில்லை. தமிழ் குன்றிய காலத்தில் தெய்வப்புலவர் திருவள்ளுவர், ஆறுமுக நாவலர் போன்ற பெரியோர்கள் தோன்றி, குன்றும் தமிழினத்துக்கு புத்துயிர் கொடுத்து தட்டியெழுப்பினார்கள். சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவரசர்களும் தமிழன்னையை சங்கத்தில் அரங்கேற்றி அவளின் பாதங்களை வணங்கினார்கள். அன்று அரசர்களால் போற்றப்பட்ட தமிழ்மாதா இன்று பிறமொழிகளால் நசுக்கப்படுகிறாள். இதை நாம் பார்த்துக்கொண்டிராது நசுக்கப்படுகின்ற தமிழ் சமுதாயத்தை கட்டியெழுப்பி, அதை வளர்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட சில காலத்துக்குப் பின் சேற்றிலே மலர்ந்த செந்தாமரையைப் போன்று புரட்சிக்கவி சுப்பிரமணிய பாரதியார் தோன்றினார். இவர் தமிழ் மொழியை வளர்த்தார். தமிழின் பெருமையை உலகறியும் வண்ணம் பல கவிகளை இயற்றினார். வாழையானது தன்னுயிருக்குத் தானே சுவையாகிய யமனைத் தேடிக் கொள்கிறது; அதுபோன்று தமிழ்மக்கள், தாமே அயல் மொழிகளை கற்று தமிழ்தாய்க்குத் அழிவைத் தேடிக்கொள்கிறார்கள். இப்போது தமிழ்மொழி தாழ்ந்துக் கொண்டே போகிறது. தமிழ் மக்கள் தூங்குகிறார்கள். தமிழ்ப்புலவர்கள், பெரியார்கள் இச் சமயத்திலிருந்தால் தூங்குவார்களா? அன்றேல் துள்ளி எழுவார்களா? பருந்தானது புறாக்களை சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருப்பது போன்ற பிற மொழிகள் தமிழை அழிப்பதற்காக வட்டமிடுகின்றன. இந்நேரத்தில் நாம் நம்மொழியைப் பிற மொழிகள் தாக்கா வண்ணம் காக்க வேண்டும். தமிழராகிய நாம் தூங்காது தமிழ் மொழியை அழிப்பதற்கு வட்டமிடுகின்ற பருந்துகளோடு எதிர்த்துப் போராட வேண்டும்.

இப்போது மக்கள் எம்மை வாழ்விக்கின்ற மொழியை மறந்து உத்தியோகத்திற்காக அயல் மொழிகளை கற்கின்றார்கள். உத்தியோகம் பெற்றால் நாம் இம்மையில் சுகமாக வாழலாம் ஆனால், நற்றமிழ் மொழியை ஓதினால் நாம் இம்மையிலும் மறுமையிலும் பெருமையும் சுகமுமடையலாம். இதை தமிழ் மக்கள் அறியாது உத்தியோகத்தை நாடுகிறார்கள். அறியாமையை வளர்க்கின்றார்கள். இப்போது தமிழ்மொழி அவமதிக்கப்படுகிறது, ஒதுக்கப்படுகிறது, நசுக்கப்படுகிறது. இதை யாம் பார்த்துக்கொண்டிருக்க கூடாது. நாம் உத்தியோகத்தை நாடாமல் அயல் மொழிகளை கற்காமல் மன உறுதியோடு தமிழ் மொழியை வளர்க்க வேண்டும். ஆதலால், தமிழ் மக்களே நாம் ஒவ்வொருவரும் தமிழுக்காகப் போராட வேண்டும், குற்றமற்ற தமிழன்னையை போற்ற வேண்டும். தமிழுக்காக உயிரையும் கொடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். தமிழ் அன்னை சிந்தும் ஒவ்வொரு துளி கண்ணீரும், நம் மனதில் அம்புகள் போன்று ஏற வேண்டும். தமிழ் மக்களே, புறப்படுங்கள்; தமிழ் அன்னையை காக்கப் புறப்படுங்கள்.

ா. கண்ணா
ஆண்டு 8.

# மனிதனாக. . . .

''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்பது ஔவையின் வாக்கு. ஆனால் அரிதினும் அரிது மனிதனாய் வாழ்தல் என்பது மறுக்க முடியாததாகும். புல்லாகி, பூண்டாகி, புழுவாகி, மீனாகி, மரமாகி இன்னும் பல உருவமாகி இறுதியில் மனிதனாகின்றான், என்பது சமயதத்துவமாகும். எனவே நாம் மனிதனாக பிறக்கின்றது பெரும் பாக்கியமாகும். ஆனாலும் பிறப்பின் பெருமைக்கேற்ப வாழ்வதே மனித தன்மையாகும்.

மானிலத்தில் வாழும் மானிடன் ஒவ்வொருவனும் உணர்ச்சி வசத்தால் தீயவனாகி விடுகின்றான். ஆசைகளை குறைத்து உணர்ச்சிகளை கட்டுப்படுத்துபவனே மனிதனாக வாழ முடியும். மனிதன் பிறக்கும் போது நல்லவனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவோ, தீயவனாகவோ பிறப்பதில்லை. ஆனால் அவனை நல்லவனோ தீய வனோ எனத் தீர்மானிப்பது அவனது நடத்தையாகும். சமுதாயத்திற்கு நல் லவனாகவும் மனசாட்சிக்கு தீயவனாகவும் வாழும் எத்தனையோ மனிதஜீவன் கள் மானிலத்தில் நடமாடுகின்றன. பணத்தை கொண்டு நல்ல பெயரையும் வாங்கலாம் கெட்டபெயரையும் வாங்கலாம். ஆனால் அவனின் நடத்தையே அவனை மனிதனாகவோ விலங்காகவோ தீர்மானிக்கும்.

''எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்த நன்றி கொன்ற மகற்கு''

என்பது வள்ளுவர் வாக்கு, செய்த நன்றியை மறக்கும் உயிருக்கு உய் வில்லையாகையால் நாம் கயவனாக விளங்காது மனிதனாக வாழ்வது எமது கடமையாகும்.

''மயிர் நீப்பின் வாழாக் கவரி மானன்னார்
உயிர் நீப்பின் மானம் வரின்''

எனும் இலக்கணத்தை கொண்டவர் அநேக ஏழைகள் அவர்களிடம் உள்ள மாபெரும் சொத்து மானம், அதை உயிரைவிட மேலாக கருதுவது அவர்களது பண்பாடாகும். எனவே மனிதனாக பிறந்தவன் கவரிமான் போன்றிருக்க வேண்டும். மனிதனாக வாழத்தெரியாது விட்டால் கவரிமானை பின்பற்றலே சிறந்ததாகும்.

''ஒன்று எங்கள் ஜாதியே ஒன்று எங்கள் நீதியே
உழைக்கும் மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே''

என்பதை எவரும் ஏற்பதில்லை தமிழினம் அழிந்ததற்கும் தமிழினம் தலை குனிந்ததற்கும் தமிழரது சில பண்பாடுகளும் நடத்தைகளுமே காரணமாகும். இதனால் சேற்றில் உதிக்கும் செந்தாமரைகள் அதில் அமிழ்ந்து விடுவதை போல் பல தாழ் குல மக்கள் கடல் போன்று பெறும் துயரிற்சிக்கி மறைந்து விடுகின்றனர். ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' என்பது ஆன்றோர் வாக்கு. உயர்ந்தோன், தாழ்ந்தோன் என்ற உணர்ச்சி ததும்பிய வேற்றுமை காட்டாது யாவரும் சமம், என்ற அத்திவாரத்தின் கீழ் ஒழுகினால் எமக்கெல்லாம் வாழ்வுண்டு என்பதில் ஐயமில்லை பொறாமை என்பது விஷத்திலும் கொடியதாகையால் இந்தக் கொ டிய விஷத்தை நாம் வெளியே கக்காது வாழல் வேண்டும்.

இயற்கையும் செயற்கையும், இன்பமும், துன்பமும், நன்மையும், தீமையும் மனித வாழ்வின் இயற்கை நிலைகளே. மனிதன் இயற்கையாக பிறந்து செயற்கை யாக வாழ்கின்றான். நன்மையை செய்தால் புகழப்படுகின்றான். தீமையை செய் தால் இகழப்படுகின்றான். இதன் விளைவாக ஒவ்வொறு மனிதனின் வாழ்வில் சுகமும் துக்கமும் கலந்து வருவது வழக்கமாயிற்று. இதனால் சமய சந்தர்ப்பங் களுக்கேற்ப இவ்வாறான சூழ் நிலைகளின் கீழ் ஒவ்வொருவனது வாழ்க்கையும் அவனது சரித்திரமும் அமைந்து விடுகின்றன.

ஐவ்வொழுக்கங்களையும் கடைபிடித்து ஐம்புலன்களினால் உண்டாகும்ஆசை களை கட்டுப்படுத்தி பஞ்சமா பாதங்களை மறந்து வாழ்பவனே மனிதனாவான். கடலலைகள் எவ்வாறு புரண்டலைகின்றதோ அவ்வாறே மனிதனின் வாழ்வும் சொர்க்கத்தையும் நரகத்தையும் சென்றடைகின்றது. மனிதராக பிறந்தவரெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் மனிதரல்ல, அதில் மிருகங்களுமுண்டு, தெய்வங்களும் உண்டு. ''ஆறிலும் சாவு நூறிலும் சாவு'' என வாழ்க்கை வரையறை கொடுக்கப்பட்டுள்ளதால் நாம் இன்று வாழலாம் நாளை மறையலாம். எனவே மனிதன் பயனுள்ள வனாக வாழல் வேண்டும். எனவே மனிதனாக வாழுங் காலம் மட்டும் தேடிப்பெற்ற செல்வத்தைவிட மனிதனாக பிறப்பதை மதித்துக் காக்க வேண்டியது எமது கடமையாகும்.

க. சரவணன்
12ம் வருடம்
(உயிரியல் பிரிவு)

# அருமையான மாணவன்

நன்கு கற்று உயர்ந்திடுவீர்
நலன்கள் யாவும் பெற்றிடுவீர்
நல்ல, நல்ல நூல்கள் கற்று
நற் பிரஜையாக வாழ்ந்திடுவீர்

ஒன்று கூடி சமாதானம் நிலவ
எங்கும் தீமை அகன்று போக
அறிவு வேட்கை எங்கும் திகழ
நன்கு கற்று உயர்ந்திடுவீர்

நல்ல, சிறந்த மாணவராய் திகழ
உலகம் எங்கும் உம்மை புகழ
அறிவுப் பஞ்சம் விரைந்து அகல
நன்கு கற்று உயர்ந்திடுவீர்

அவா, வெகுளி தீயகுணம் மறைய
போட்டி, பொறாமை இல்லா வண்ணம்
நல்ல, உயர்ந்த அறிவைப்பெற்று
நன்கு கற்று உயர்ந்திடுவீர்

அருமையான குறிக்கோள் உடைய
குருவின் பெயர் நன்கு உயர
என்றும் நல்லதையே செய்து
நன்கு கற்று உயர்ந்திடுவீர்

க. சதீஸ் குமார்
ஆண்டு 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கு மேடையில் என் எண்ண அலைகள்

துள்ளித்திரியவேண்டிய துடுக்கான வயதில் ஒருவன் சிறையில் இருப்பது என்றால் மிகவும் கடினம்தான். பற்றுக்கள் பாசங்கள் நிறைந்த இவ்வயதில் சிறையில் அதிலும் இன்னும் சொற்ப நிமிடங்களில் தூக்குமேடையில் தொங்கப் போவதை எண்ண என் கண்கள் குளமாகின்றன, கதியிழந்து கண்ணீர் வடித்து தூக்குமர நிழலில் இளைப்பாறும் என் சோதனைகள் மலிந்த கதையைக் கேளுங்கள்.

பேரும் புகழும் கொண்ட செல்வக் குடும்பத்தில் தலைமகனாய்ப் பிறந்த நான் சிறுவயதில் தந்தையரை இழந்தேன். அதனால் குடும்பப்பாரம் என் தலையில் விழுந்தது. வயதான அன்னையையும் உயிருக்குயிரான தங்கையையும் வாழவைக்க என் படிப்பை நிறுத்தினேன், பெற்ற தாயின் துயர் துடைக்கக் கூலி வேலை செய்து அல்லும்பகலும் பாடுபட்டு கஞ்சியையும் கூழையும் குடித்து வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்தோம். எதிர்பாரா விபத்தொன்றில் அன்னையைப் பறிகொடுத்து அனாதைகளானோம் தாய்ப்பாசத்தை இழந்து, சொந்த ஊரைப் பிரிந்து, காடும் மேடும் அலைந்து பல இன்னல்களை அனுபவித்தோம். எந்த நிலையிலும் நெறியோடு வாழவேண்டும் என வலியுறுத்தி வளர்த்திட்ட தாயின் பாதையில் நடந்து நாம் பிச்சைக்காரர்களாகி விட்டோம். எமது துயர் துடைக்க யாரும் முன்வரவில்லை நாம் கொடுமையில் வாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த சமூகத்திடம் வேலைதேடிப்போனேன். யாரும் என் மெலிந்த உடலைப் பார்த்து வேலை கொடுக்கவில்லை. என்னுள்ளேயே கொழுந்து விட்டெரிந்த வறுமைத்தீயால் அதன் கொடுமை தாங்காமல் அறம், தருமம் என்பன எரிந்து சாம்பலாகின. என் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக செல்வச் சீமான் ஒருவனின் வீட்டுக்குள் புகுந்து அகப்பட்ட எல்லாவற்றையும் கட்டிக்கொண்ட வேளையில் செல்வந்தரின் கை என் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது அவர் ''திருடன்! திருடன்!'' எனக் கத்தினார். அனாதையாகக் கிடக்கும் என் தங்கையின் உருவம் என் கண்முன் தோன்றியது. அருகில் கிடந்த இரும்பைப் பாய்ந்து எடுத்தேன் என்வேதனை தீரும் வரை அடித்தேன். செல்வந்தர் செயலிழந்து போனார்.

ஏய்! உலகமே வயிற்றுக்காய் அல்லும் பகலும் அலைந்தேன் நீ பாராமுகமாய் என்னை வஞ்சித்துவிட்டாய். இன்று கொலைக் குற்றத்திற்காக சட்டத்தின் பிடியில் சிக்கவைத்து தூக்குமேடை செல்லும் வரை சாட்சியமும் அளித்து விட்டாய்! இறைவா இது உன் ஏற்பாடுதானே! இன்னும் சொற்ப நேரத்தில் என் கதை முடிந்துவிடும் நான் பிறந்த பொன்னாடே! நான் இறந்த பின்னாவது ஏழைகளுக்கு ஒரு வழிகாட்டு! மனித சமுதாயமே! தெருவோரத்தில் அனாதையாய் ஓடும் என் தங்கையை அழைத்துப் பிச்சைகொடு! நான் இறந்தபின் நீங்கள் தான் என்னைக் கொலைகாரன் ஆக்கினீர்கள் என்பதை இவ்வுலகிற்கு எடுத்துச் சொல்! இதைத் தவிர நான் உங்களிடம் வேறு எதுவுமே கேட்கவில்லை.

ஜெ. நிரோஷன்
ஆண்டு 7

மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கு மனிதனால்
ஆக்கப்பட்டதே சராசரி இலக்கியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை கண்ட பகற் கனவு

சிவன் என்ற பிச்சைக்காரன் பிள்ளையார் கோவில் தெருவில் பிச்சை எடுத்து வாழ்ந்து வந்தான். அவன் அன்றாடம் தெருத்தெருவாக பிச்சை எடுக்கச் செல்வது வழக்கம் ஒரு நாளில் சில வேளை 20 ரூபாவிற்கு மேல் கிடைப்பது வழக்கம் அதனை எடுத்து தனது பசியை தீர்த்துக்கொள்வான்.

ஒரு நாள் அதிர்ஷ்ட லாபச்சீட்டு ஒன்றினை எடுத்தான். அதில் இருந்த இலக்கங்களை ஒருவாறு வாசித்தான், அதனை தனது கிழிந்த சட்டை பையினுள் போட்டுக்கொண்டான். ஒவ்வொரு நாளும் அதனை பார்த்து தனக்கு அதிர்ஷ்டம்வராதா என்று ஏங்குவான். அதனை நினைத்தவாறே நித்திரை கொண்டான். அன்று ஞாயிற்றுக்கிழமை வழமைபோல் சாப்பிட சாப்பாட்டுக் கடைக்குச் சென்றான். வீரகேசரி பத்திரிகையை ஒருவன் வாசித்துக்கொண்டிருந்தான். அதனை எட்டிப் பார்த்து நேற்று இழுத்த அதிர்ஷ்ட லாபச்சீட்டு முடிவு வந்திருக்கின்றதா? என்று கேட்டான். அந்த மனிதனும் ஆம் வந்திருக்கிறது என்று கூறிவிட்டு காட்டினான். சிவனுக்கு ஞாபகமாக இருந்த அதே இலக்கங்கள் இருந்தன ஆனாலும் அதனை வெளிக்காட்டாமல் வந்து விட்டான் அவன் சேகரித்து வைத்திருந்த பணத்தின் உதவியுடன் கொழும்புக்குச் செல்ல பஸ் வண்டியில் ஏறினான்.

பஸ் கடுகண்ணாவையை நோக்கி சென்று கொண்டிருக்கும் போது திடீரென்று பள்ளத்தில் குதித்தது. அந்த பயத்தில் ஐயையோ என் அதிர்ஷ்டலாபப் பணத்தினை எடுக்க முடியவில்லையை என்று கத்தினான் அவ்வழியே சென்ற ஒருவர் சிவனை தட்டி எழுப்ப என்ன ஏன் கத்துகிறீர்கள் என்று கேட்டார். இல்லை ஐயா கனவு ஒன்று கண்டேன் என்று கூறினான்.

ஆக்கம்: S. SEETHALAXMAN

❈ ❈ ❈

**1993**ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றோர் விபரம்.

1 ஜீ. நிமலன் - 285 2 ராஜ்குமார் - 281

3 எஸ். எச். எம். றிஸ்மி - 278

235 புள்ளிகளுக்கு கூடுதலான புள்ளிகளைப் பெற்றோர் விபரம்

1 உத்தரகுமார் - 260 2 எஸ். சதீஸ் - 258

3 எஸ். ருக்ஷகான் - 252 - நுவரெலியா மாவட்டம்

4 எஸ். பிரதீப்குமார் - 238 ,, ,,

உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய விஞ்ஞான மாணவர்களின் எண்ணிக்கை 25

பல்கலைக்கழக அனுமதிக்காக முதலாவது அழைப்பைப் பெற்றோர் எண்ணிக்கை - 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கடமை

மாணவன் என்ற முறையில் மாணவர்களுக்கு பல கடமைகள் உண்டு. நேரத்திற்கு பாடசாலை செல்லவேண்டும். பாடசாலை சீருடையை மிகத் தூய் மையாக அணிந்து செல்லல் வேண்டும். பாடசாலை வகுப்பறையையும் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். மேசை, கதிரை, கரும்பல கையையும் பொதுச் சொத்தாக வைத்து அதை புனிதமாகப் பேணல் வேண்டும். பாடசாலைக் கீதம், பாடசாலைக் கொடி, பாடசாலைச் சின்னம் என்பவற்றிற்கு மதிப்பு அளிக்க வேண்டும். பாடசாலைக்குரிய ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப் பட்டு நடத்தல் வேண்டும்.

எமது வகுப்பாசிரியருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும், அதிபருக்கும் நம்பிக்கை, பணிவு, நல் மரியாதை, கீழ்ப்படிவாக நடத்தல் வேண்டும். அவர் களை வகுப்பறையில் அல்லது வேறு எங்காவது கண்டாலும் அந்த நேரத்துக் குரிய வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளல் வேண்டும். ஆசிரியர் சொற்படி நடத்தல் வேண்டும். அவர்களை தெய்வமாக மதித்தல் வேண்டும். அவர்கள் வகுப்பறையில் கற்பிக்கும்போது சிரத்தையுடனும் அவதானத்துடனும் கற்றல் வேண்டும். வீட்டுப்பாடங்களை ஒழுங்காகச் செய்வதுடன் கற்றதை மீண்டும் கற்றல் வேண்டும். ஆசிரியரை எதிர்த்துப் பேசல் கூடாது. ஆசிரியரின் மனத் துக்கு இசைவாக நடந்து அவரிடம் நற்பெயரை வாங்குதல் வேண்டும் இதன் மூலம் நல்ல மாணவன் என்ற பெயரை ஒருவன் எடுக்கமுடியும்.

**K. சந்திர மோகன்**

ஆண்டு 6E

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

நோய்கள் உண்டாவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன, போசனை குறைவு ஒரு காரணமாகும் அசுத்தமான உடலில் நோய்கள் ஏற்படுகின்றன. உண்ணும் உனவு அசுத்தமாக இருந்தால் நோய்கள் ஏற்படுகின்றன. வீடும் சுற்றுபுறமும் சுத்தமாக இல்லாவிட்டால் நோய்கள் உண்டாகும். நாம் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு உடலுக்கு வேண்டிய சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். உடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தினமும் குளித்து சுத்தமான உடை அணிய வேண்டும் வாயையும் பற்களையும் சுத்த மாக வைத்திருக்க வேண்டும். நாம் கொதிக்க வைத்து ஆறிய நீரை பருக வேண்டும். திறந்து வைத்திருக்கும் உணவுகளில் நோய்க் கிருமிகள் இருப்ப தால் அந்த உணவை உண்ண கூடாது. வீடுகளில் சுத்தமாக சமைத்து மூடி வைத்து உண்ண வேண்டும். நாம் வசிக்கும் வீட்டை தினமும் கூட்டி அழுக் குகளை அகற்றி சுத்தம் செய்தல் வேண்டும். வீட்டு சுற்று புறத்தையும் கூட்டி துப்பரவாக வைத்திருக்க வேண்டும். சுற்று புறங்களில் நீர் தேங்கி நிற்கவிடாது, சிரட்டை வெற்றுத் தகரப் பேணிகள் இவற்றை அகற்றி விடுதல் வேண்டும். இந்த பழக்கங்களை கடைப் பிடிப்பதின் மூலம் நாம் நோய் இல் லாமல் நிம்மதியாக வாழலாம்.

**கூன்கே**

ஆண்டு 5D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Helianthus ஆக பிறவாயோ

''பூச்சிகளைப் பிடித்துண்ணும் Drosera தாவரத்தை மலரென்று நம்பி, மாட்டிக்கொண்ட ஒரு பூச்சியின் உள்ளக்குமுறல்.''

சேற்றுநிலத் தாமரையென
உன்னழகில் நான் மயங்கி
சுற்றி வளைந்தே உன்னிடம்
சற்று அமுதுண்ண வந்தேனே.

ஆதவனொளி பட்டே உன்
உணர் கொம்புகள் மின்னிடவே
நாடி விட்டேன் உன்னருகில் - நீ
நச்சுப்பொறியென்பதை அறியாமல்.

அமுதுண்ண வென நானும்
உனை நாடி வந்துவிட உன்
உணர் கொம்புகளாலே எனை
மடக்கிப் பிடித்துவிட்டாய்

கண்டதும் காதலென்று கருதும்
காளையர் போல் வாலை உன்
அண்டை வந்து அமுதுண்ண
சண்டித்தனம் பண்ணிவிட்டாய்.

நாணுகிறாய் Mimosa போல
என்றெண்ணி நானுமுனை
நாயகனாய் நாடிவிட
நயவஞ்சகம் புரிந்ததென்ன.

கட்டிப் பிடிப்பாயென எண்ணி
நானுமுனை நாடி வர
ஒட்டி விட்டாய் என் மேனியை
Multibond பசை போலவே

காளை யென வாலை யுன்
அழகினிலே மயங்கிவிட
கட்டிவிட்டாய் உணர்கொம்புகளால்
என்னழகு Drosera வே

Anthocyanin கொண்டே எனை
மயக்கிவிட்டுப் பின்னே - இது
வண்டு தானே என
மாளச்செய்து விட்டாய்.

மறுபிறப்பென் றொன்டிருப்பின் - நீ
Helianthus ஆக பிறப்பாயோ
Butter fly ஆக நான்பிறந்து
நினை நாடி வந்திடுவேன்.

Mimosa - தொட்டால் சுருங்கித்தாவரம்
Drosera - ஊனுண்ணித் தாவரம்
Anthocyanin - சிவப்பு நிறப்பொருள்
Helianthus - சூரியகாந்தி

ஆக்கம்:

A/L 94 Bio **மாணவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திரம் இதயமாகிறது . . .

டாங், டாங் . . . டாங் கடிகாரத்தை பார்க்கிறேன் நான். பெரியமுள்ளும், சிறிய முள்ளும் ஒருடல் ஈருயிர் போல் தழுவிக் கொண்டிருக்கும் நேரம். ஆம், நேரம் சரியாகப் 12 மணி. ஊரெல்லாம் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்க என் ஆய்வுகூடத்தில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இப்படி எத்தனை இரவுகள், எத்தனையெத்தனை இரவுகள் கண்விழித்துக் கொண்டிருக்கிறேன். என் புதிய ஆராய்ச்சியில், புதிய கண்டுபிடிப்பிலே வெற்றி பெற வேண்டும் என்ற பயங்கர வெறிதான் என்னை இந்தளவுக்கு மாற்றி இயந்திரமாக இயக்கிக் கொண்டிருக்கின்றது. இந்த இளம் விஞ்ஞானியின் புதிய கண்டுபிடிப்பை முழு உலகமும் எந்த நிமிடத்திலும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட உலகப் பிரசித்தி பெற்ற எனது புதிய கண்டுபிடிப்பு ஒரு இயந்திரமனிதன். இந்த இயந்திரமனிதன் இயங்கத் தொடங்கிவிட்டால் எண்ணி 10வது நிமிடத்தில் கண்டி போன்ற ஒரு நகரத்தையே சுடுகாடாக்கி விடுவான். ஒரே நேரத்திலே ஆயிரம் பேரைச் சமாளிக்கக் கூடியவன் இவன். அந்தளவுக்கு அவனது மூளையில் ‘அழிவு’ என்ற ஒரு சிந்தனையைத்தான் Programme பண்ணப் போகிறேன் எத்தனை கோடி ஆண்டுகள் ஆனாலும் இவன் ஓயப்போவதுமில்லை அழியப் போவதுமில்லை. இப்போது என் கையில் இருக்கும் Controller ஒன்றுதான் அவனைக் கட்டுப்படத்தக்கூடியது. இந்த இயந்திரமனிதனை வைத்துக் கொண்டு எந்த நாட்டையும் அழித்துவிடலாம்; அடி பணியச் செய்து விடலாம். அவனை இயக்கிய 5வது நிமிடத்திலே அந்த நாடு என் காலடியில். ஆஹா.

இப்படிப்பட்ட இந்த இயந்திரமனிதன் தயாரானவுடன் உலகின் பெரிய, பெரிய வல்லரசுகள் எல்லாம் நீ முந்தி, நான் முந்தி என்று போட்டிப் போட்டுக் கொண்டு இந்த Formula வை வாங்கமுன்வரும்; கோடி கோடியாகக் கொட்டித் தரும். மனிதனுக்கு மனிதனே நம்பிக்கையில்லாமல் போய்விட்ட இன்றைய யுகத்திலே யுத்தங்களிலே என் இயந்திர மனிதனைப் பயன்படுத்தி உலகை தன் கையில் வைத்திருக்க எல்லா நாடுகளும் துடிக்கப் போகின்றன. எந்த நாடு அதிகபணம் தருகிறதோ அந்த நாட்டிற்கே இந்த Formulaவை விற்றுவிட்டு, இந்த குட்டித்தீவிலிருந்து தப்பிப்போய் நான் சுகபோக வாழ்க்கை வாழப்போகிறேன். பணத்திலேயே புரண்டெழப் போகிறேன் நான். இது தான் என் எதிர்காலத் திட்டம்.

இப்போது என் கண்கள் சற்று சுழல ஆரம்பித்தன. நித்ராதேவி என்னை ''வா, வா'' என்றழைக்க என் ஆராய்ச்சிகளை நிறுத்திவிட்டு படுக்கையில் சாய்ந்தேன். எவ்வளவு நேரம் தூங்கினேன் என்று தெரியவில்லை. திடீரென்று விழித்துக்கொண்டேன். எனக்கு திக்கென்று இருந்தது. ஆம், என் முன்னால் ஓர் கரிய உருவம் நின்று கொண்டு இருந்தது. அந்த விடிந்து விடாத அதிகாலையில் எனக்கு கோடைவெயில் போல் வியர்த்துக் கொட்டியது. அடிவயிற்றில் ஏதோ செய்வது போல் இருந்தது. இப்போது அந்த உருவம் என்னருகில் வந்து விட்டது. வெளிச்சத்திலே முகத்தை உற்று நோக்கினேன். என் உடலிலே 2500 வோல்ற்று மின்சாரம் தாக்கிய அதிர்ச்சி. என்ன ஆச்சரியம், என் முகத்தை அப்படியே உரித்து வைத்தாற்போல் இருந்தது அந்த முகம். படிந்து வாரப்பட்ட தலை, அகன்ற நெற்றி, நீண்ட புருவம், துரு, துரு வென்ற மீசை, சவன்னாப் புன்னிலம் போன்ற தாடி, நடுத்தர நிறம் இப்படி அங்குலம் அங்குலமாக இல்லை அணுவணுவாக என்னை அப்படியே அச்சடித்திருந்தது அவன் முகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயதிலே ''EVIL DEATH'' பார்த்த போது ஏற்பட்ட பயத்தை விட இப்போது பலமடங்கு பயம் என்னைப் பற்றிக் கொண்டது. யாரிவன்? என்ற கேள்விக்கு என் விஞ்ஞான மூளையால் கூட விடைதேட முடியவில்லை. என்னை விட்டு ஓடிப்போன தைரியத்தை பலவந்தமாக உதவிக்கழைத்துக் கொண்டு பேசுவதற்கு வாயைத் திறந்தேன். ஆனால் முடியவில்லை. முன்னொருமுறை சமையல் பிரியையான அடுத்தவீட்டு Aunty செய்து தந்த வித்தியாசமான அல்வாவை சாப்பிடப்போய் அது எப்படி நாக்கில் ஒட்டிக்கொண்டதோ அதே நிலைதான் இப்போதும். மீண்டும் நான் தொண்டையைச் செருமிக் கொண்டு ''நீ... நீங்கள் யார்?'' என்று கேட்டேன். உடனே அந்த மர்மமனிதன் தமிழ்ப்பட வில்லனைப் போல் ஒரு அட்டகாசமான சிரிப்பை உதிர்த்து விட்டு ''நான் யார்? என்பதை தெரிந்து கொள்வதை விட நான் ஏன் வந்தேன் என்பதை நீ தெரிந்து கொள்'' என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தான். ''கேட்கக்கூடாதவற்றைக் கேட்டு கேட்கவேண்டியதை கோட்டைவிடும் முட்டாள் விஞ்ஞானிகளின் பரம்பரையில் வந்தவன்தானே நீயும்'' என்று ஏளனமாகக் கூறிவிட்டு மீண்டும் சிரித்தான் அந்த மர்ம மனிதன் இந்த உலகமே போற்றும் விஞ்ஞானியை, மேதையை, அதாவது என்னைப் பார்த்து, கேவலம் இவன், முட்டாள் என்று கூறியது எனக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. என் அச்சமெல்லாம் தலைமறைவாகி தன்மானம் தலைதூக்க ''யாரைப்பார்த்து முட்டாள் என்று கூறினாய்?'' என்று உரக்கக் கத்தினேன். 'உன்னைப் பார்த்துத்தான் முட்டாள் என்று கூறினேன் இந்த கணத்திலே சொன்னதைக் கூட உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே நீ முட்டாள் என்பதை நீயே நிரூபித்து விட்டாயே' என்று பதிலடி கொடுத்தான் அந்த மர்மமனிதன். வந்த ஆத்திரத்தையெல்லாம் வார்த்தை எனும் வடிவிலே அவன் மீது செலுத்திய நான் இந்தளவுக்கு விஞ்ஞானத்தைக் கரைத்துக் குடித்து, இத்தனை ஆராய்ச்சிகளையும், கண்டுபிடிப்புக்களையும் செய்த என்னைப் பார்க்க உனக்கு முட்டாள் மாதிரியா தெரிகிறது? என்று என் வாதத்தை முன் வைத்தேன்'

''நண்பனே உன்னிடம் வாகனம் தான் இருக்கின்றதே தவிர அதைச் செலுத்தும் வழி உனக்குத் தெரியவில்லை. பழம் வெட்டக்கொடுத்த கத்தியிலே நீ அப்பாவி உயிர்களையல்லவா பலியிடுகிறாய்?'' என்று அவன் கூற அவனது தமிழ் உவமானங்கள் ஒன்றும் என் விஞ்ஞான மூளைக்குப் புரியவில்லை. ''நீ என்ன சொல்கிறாய்?'' என்று மீண்டும் கேட்டேன். ''ஆம் தோழனே, இந்த மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டிய விஞ்ஞான அறிவை உங்களைப் போன்ற விஞ்ஞானிகள் கைபொம்மைகளாக்கி வாழவேண்டிய மனித சமூகத்திற்கு சாவுமணி அடிக்கிறீர்கள். அப்பாவி மக்களின் உயிர்குடிக்கும் ஆயுதங்களையும், ஏவுகணைகளையும் செய்து குவிக்கிறீர்களே. இதைத் தான் உங்கள் விஞ்ஞானம் கற்றுத் தந்ததா? சற்று சிந்தித்துப்பாருங்கள். எத்தனையோ இலட்சக்கணக்கான மக்கள் உணவின்றி தினமும் வாடுகிறார்களே. அவர்கள் பசி தீர்க்க உங்கள் விஞ்ஞானம் வழிசெய்யாதா? எத்தனையோ புதுப் புது நோய்களினால் மக்கள் துன்புறுகிறார்களே. அவர்கள் பிணி தீர்க்க உங்களால் முடியாதா? அவர்களைக் காக்கத்தான் உங்களால் முடியாது! அவர்களை அழிக்காமல் சரி இருக்கலாமே. இன்று ஒரு சில விஞ்ஞானிகளைத் தவிர ஏனைய எல்லோரும் அழிவுப்பாதையில் தானே தங்கள் விஞ்ஞான அறிவைப் பயன்படுத்துகிறார்கள்.'' என குட்டிப் பிரசங்கமொன்றையே மேற்கொண்டான் அந்த மர்மமனிதன்.

''சரி நீங்கள் கூறியது போல் மனிதவாழ்விற்கு அவசியமான கண்டுபிடிப்புகளை நாங்கள் செய்வதாகவைத்துக்கொள்வோமே, ஆனால் ஏவுகணைகளுக்கும், ஆயுதங்களிற்கும் தரும் பணத்தின் நூறிலொரு பங்கைக் கூட அவற்றிற்கு தருவதற்கு எந்த நாடும் முன்வருவதில்லையே. இந்த யுத்த ஆயுதங்களிற்கு அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிக்கணக்கிலே பணத்தைக் கொட்டும்போது நாங்கள் ஏன் ஏனைய கண்டு பிடிப்புகளைச் செய்யப் போகிறோம். எங்களுக்குப் பணம் வரும்போது எவன் வாழ்ந்தாலென்ன? எவன் செத்தாலென்ன?'' இது என் வாதம்.

''என் அன்பிற்குரிய விஞ்ஞானியே உன் அறியாமையை எண்ணி நான் வெட்கப்படுகிறேன். தினந்தோறும் இயந்திரங்களுடன் வாழ்வதால் தானோ உங்கள் இதயமும் கூட இயந்திரமாக மரத்துவிட்டது. சோதனைக் குழாயில் அவர்களுக்குள்ளேயே உங்கள் உலகத்தை நீங்கள் வரையறுத்துக் கொண்டதால் அன்பு, பாசம், மனிதாபிமானம், சமாதானம் என்ற எந்தவொரு வார்த்தைக்கும் பொருள் புரியாமல் புலம்புகிறீர்கள். யுரேனியத்தை பிளக்க பிறக்கும் சக்தியைத் தான் நீங்கள் அறிவீர்களே தவிர மனிதசமுதாயத்தின் மாபெரும் சக்தியை நீங்கள் அறியமாட்டீர்கள், சோடியமும் ஒட்சிசனும் தாக்கி என்ன விளைவு தோன்றும் என்பதைத் தான் நீங்கள் அறிவீர்களேயன்றி உங்கள் மூடச்செயல்களின் விளைவு உங்களுக்கே தெரியாது. அப்படி தெரிந்திருந்தால் இத்தனை உயிர்களை கேவலம் பணத்திற்கு விலை பேசுவீர்களா? இல்லை இல்லை. விஞ்ஞானத்தையே விலை பேசும் நீங்களெல்லாம் விஞ்ஞானிகளா? இல்லை இல்லவே இல்லை.

''நிறுத்து'' என்று உரக்கக் கத்தியபடி எழுந்தேன். ஓ! இவ்வளவு நேரமும் நான் கண்டது வெறும் கனவா இல்லை வெறுமனே கனவாக இருக்க முடியாது. அப்படியென்றால் நான் கண்ட அந்த உருவம்! மனச்சாட்சி என்று புத்தகங்களில் படித்தேனே. அதுவா? என் மனதிற்கு பிடிக்காததை நான் செய்யும்போது அந்த ஆழ்மனத்தின் வெளிப்பாடு தானே மனச்சாட்சி, அப்படியென்றால் இப்போது நான் கண்டது கனவா? இல்லையில்லை, இது வரை வாழ்ந்த வாழ்க்கை தான் கனவு. இப்போது கண்டது உண்மை; யதார்த்தம்; சத்தியம். இது வரை காலமும் என் விஞ்ஞான அறிவை கேவலம் பணத்திற்கு அடகு வைத்துவிட்டேன். இனி மேலும் கூடாது. இப்போதே அந்த இயந்திரமனிதனை இல்லையில்லை என் அரக்கத்தனத்தின் மொத்த உருவத்தை அழித்து விட்டு மனிதகுலத்தின் மேம்பாட்டிற்காக என் விஞ்ஞான அறிவை பயன்படுத்தப்போகிறேன்.

யன்னலைத் திறந்து வெளியே பார்த்தேன். காரிருள் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது, என் உள்ளத்திலும் கூட கீழ் வானிலே ஒளிக் கதிர்கள் எட்டிப்பார்த்தன, என சிந்தனையிலும் கூட சுற்றாடலெங்கும் ஒரு புது வேகம் பரவத்தொடங்கியது, என செயல்களிலும் கூட.

**ஆக்கம்:- S. கிருஷ்ணபிரதீப்**
**A/L – 94 (உயிரியற் பிரிவு)**

இலட்சியம் என்பது உயரச் செல்லும் பறவை
அதன் இறக்கைகள் முயற்சி, மனத்திடம் ஆகிய இரண்டுமே.

பணத்தை மனிதன் ஆளவேண்டுமே தவிர
பணம் மனிதனை ஆளக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் எழில்

அலைவளம், மலைவளம், நிலவளம், நீர்வளம் மலிந்த இவ்வுலகின் இயற்கை அழகினால் கவரப்படாதவர் எவரும் இல்லை குழந்தை முதல் வயோதிபர் வரை இயற்கையை இரசித்து இன்பமும், நிறைவும் பெறுகின்றனர். வியத்தகு விந்தைகள் புரியும் இயற்கையை இலக்கிய கர்த்தாக்கள் அணுகும் முறை வேறு. உள்ளத்துக்குச் சலிப்புத் தராது உள்ளந்தோறும் உவகை தருவது, அமைதியும் மனச்சாந்தியும் தேடுவோர்க்கு இதந்தருவது ஆகிய பண்புகள் இயற்கையின் எழிலுக்கு உண்டு.

பண்டைத்தமிழ் கவிஞர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாக நிலப்பாகுபாடு செய்து இயற்கையின் எழிலை வரையறையினுள் நின்று சித்தரித்து மகிழ்ந்தனர். இயற்கையின் எழிலுக்குள் தமிழ்ப்பண்பாட்டை இணைத்துப் பார்த்து கவிதையாத்த சங்கத்தமிழ்ப் புலவரின் கையில் இயற்கையின் எழிலை, களிநடம் புரிந்து மழை நீர் நிலத்தில் விழுந்து - நிலத்தின் தன்மைக்கேற்ப செம்மை நிறம் பெற்று வெள்ளமாக மாறி ஓடும் போது அதனை சாதாரணமானவர்கள் பொருட்படுத்துவதில்லை. ஆனால் சங்கப் புலவர் கண்ணில் அது தென்பட்டு விட்டது. கருத்தொருமித்த காதலரின் உள்ளத்தின் இணைப்பினை ''செம்புலப் பெயல் நீர் போல்'' எனக்கூறுகின்றார். அதனால் அப்புலவருக்கு ''செம்புலப் பெயல் நீரார்'' என்ற பட்டம் வழங்கி வரலாயிற்று.

இயற்கையின் அழகில் இறைவனைக் கண்டவர்கள் சைவநாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆவர். அவர்களுள் திருஞானசம்பந்தர் சிறு வயதிலே தேவாரம் பாட ஆரம்பித்ததன் காரணமாக இயற்கையின் எழில் அவர்களுடைய பாடல்களில் கூடிய அளவில் காணப்படுகின்றது. திருக்கேதார நாதரைப் பாட முற்பட்ட சம்பந்தர்,

> ''வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
> கெண்டைபாயச் சுனைநீல மொட்டலரும் கேதாரமே''

என இயற்கையின் எழிலுடன் இணைத்துக் காட்டுகின்றார்.

தமிழ் அன்னையை அலங்கரிக்கும் பெரிய அணிகலங்களுள் காப்பியங்கள் மிகச்சிறந்தன. அவற்றின் இலக்கணத்தை கூற வந்த தண்டியலங்காரம் எனும் நூல் நாட்டுவருணனை, நகர வருணனை, சூரிய சந்திரரின் தோற்றம்; மறைவு, ஆழ்கடல் என்பவற்றின் வருணனை என்பன கட்டாயமாக இடம் பெற வேண்டிய தன்மையை வலியுறுத்திக் காட்டுகிறது. நாட்டுப்படலம், நகரப் படலம், ஆற்றுப்படலம் என படலம் படலமாக இயற்கைவளம் சிறப்பிக்கப் படுவதனைச் சிறுகாப்பியமான சூளாமணியில் கண்டு களிக்கலாம். நிலாக்காட்சியை வருணிக்காத புலவர்களே இல்லை எனலாம். கம்பர் தம்மை வளர்த்த சடையப்ப வள்ளலின் புகழ் பரவியுள்ள நாட்டில் கூற முற்படும்போது, நிலாக் கதிர்கள் உலகெங்கும் பரவியுள்ள தன்மையோடு அதனை இணைத்து,

> ''வண்ண மாலைக் கைபரப்பி
> உலகை வளைத்த இருளெல்லாம்
> உண்ண எண்ணித் தண்மதியத்
> துதயத் தெழுந்த நிலாக்கற்றை
> விண்ணும் மண்ணும் திசையனைத்தும்
> விழுங்கிக் கொண்ட'' என விரித்துக் காட்டுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் தாரகைகளின் நிரையான அலங்காரங்களின் நடுவே மதியம் தோன்றும் அழகுறு காட்சியை பாடவந்த கவி,

''கானெல்லாம் மலர்ந்த முல்லை
கானகமீ தெழுந்த தென்ன
வானெல்லாம் வயங்கு தாரை
நிரை நிரையாக மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த
வெள்ளிவெண் கும்ப மென்னத்
தூநிலா மதியம் வந்து
குண திசைத் தோன்றிற்றம்மா''
என வியந்து நிற்கின்றார்.

இலங்கை வளத்தை விரும்பிப் பாடிய நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

''எஃகிய பஞ்சினைப் போலத் - தமிழ்
எல்லாள மன்னனிருதயம் போல
வெஃகிய வெண்முகிற் கூட்டம் - இந்து
வெண்டிசை மேலெழுந்திடும்''

என மழை முகில் இந்து மகா சமுத்திரத்தின் மேல் எழுந்து வரும் காட்சியை, கடைந்தெழுந்த பஞ்சாகவும், எல்லாள மன்னனின் மிருதுவான இருநயம் போலவும் கண்டு மகிழ்ந்தார்.

பெய்தமழை வெள்ளமாகப் பாய்ந்து நதியுடன் இணைந்து, கடலுடன் சங்கமமாகும் காட்சி புலவரால் வரவேற்கப்படுகின்றது.

''முன்னே யாமை பரியஞ் சுமக்க
முரல்கள் சின்ன முதிநிற்க
மன்னு திரைகள் முழவ மியம்ப
வாரி மணக்கும் நதியையே''
என்று திருமண நிகழ்வாகக் கண்டு, எமக்கும் காட்டுகிறார்.

சாதாரணமாக நாள் தோறும் நம் கண்ணில் தெரியும் இயற்கைக் காட்சிகள் ஒவ்வொன்றும் கவிஞர் கண்ணில் காணும் போது காரண காரியத் தொடர் புடையனவாகி மனத்திரையில் அழகிய சித்திரவடிவம் பெற்று விடுகின்றன. உலகைப் படைத்த இறைவனைப் போற்றுவதா - கவிதையாத்த கவிஞரை புகழ் வதா என்பதை இயற்கையின் எழிலை வியந்து போற்றும் ஒவ்வொரு இதயமும் எக்காலத்திலும் சிந்தித்து, பார்த்து மகிழும்.

**ஆக்கம்:- செல்வன் நந்தகுமார் சஞ்ஜீவன்**
ஆண்டு 11

❦ ❦ ❦

கோழையும் வீரனாவான் தன்
உரிமைகள் பறிபோகும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்விகளே தொல்லைகளானால்......

அந்தோ ஓர் இளைஞன்
ஆயிரம் தான் எதிர்பார்ப்புக்கள்
அத்தனையையும் அவன் சுமந்து
அமர்கின்றான் அக்கதிரையில்

முன்னுள்ள சிறு மேசையில்
முழுமையாக பெரு வினாக்கள்
முடித்துவிட்ட சில காகிதங்களில்
முடிக்காமல் பல கேள்விக்குறிகள்

அப்போதொரு மெல்லிய தென்றல்
அழகாக தடவியதே அக்காகிதத்தை
அசைந்து விட்ட காகிதத்தைப்போல்
அலைபாய்ந்ததே அன்பன் மனமும்

தென்றல் பட்டு தடுமாறியதே
- இக்காகிதம் இன்று
தேகம் பட்டு தடுமாறியதே
- அவள் மேனி அன்று

தோள் பட்டு விட்டதற்கே
- ஆனாள் தேள் போன்று
தெண்டித்தும் அகலவில்லை
- அவள் மனதினில் நின்று

சீரான அக்காகிதத்தில் அவள்
- செதுக்கிய முகம் கண்டான்
சிறிதான கோடுகளிலே அவள்
- விற்புருவம் கண்டான்

சிற்றான எழுத்துக்களிலே அவள்
- முத்துப்பற்களைக் கண்டான்
சிறு சொற்களின் கோர்வையிலே
- அவள் செவ்விதழைக் கண்டான்

காலம் மறந்து கண்கள் செருக
காதல் கனவு அவன் கண்டான்
கனவு அதை தவிர்த்திடத்தானோ
காற்றாக வந்து தென்றலானதே

காகிதமும் தளம் இழந்து
- தரையில் விழ
காளையவன் கற்பனைகள்
- கலைந்து விட

காலமது கரைந்ததுவும்
- புரிந்துவிட
காகிதத்தை கையிலெடுக்க
- குனிகின்றான் குலமகன்

நிமிர்கையிலே நிதானமாக ஒருவர்
நிற்கின்றார் தெளிவான முகத்துடன்
நின்றவர் முகத்தையிவன் நோக்க
நியாயமாயவர் பறைகின்றார்
- வருமாறு

''தம்பி பரீட்சை நேரம் முடிந்து
விட்டது விடைத்தாளை கொடு''

ஆக்கம்:- **ஆண்டு 13 மாணவர்கள்**

❉ ❉ ❉

பொய்யும் புரட்டும் தற்காலிகமானவை,
நிரந்தர மற்றவை மாறாக உண்மையோ
காலப் போக்கில் காலத்தையும் வென்று
தொன்மையாக நிலைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவன் தாண்டா கவிஞன்

இக்கலியுகத்தில் நாம் காணும் கவிதைகள் பல. அக்கவிகளில் நம் உள்ளத்தில் வேரூன்றியவை சில. இவ்வாறு நிலைத்த கவியாறுகளின் பிறப்பிடங்களான கவிஞர்களின் வாழ்க்கை எமக்கு எந்தளவில் முக்கியம்? அவன் சொற்களிலே காட்டிய சொர்க்கத்தை சொந்த வாழ்க்கையில் கண்டானா? அப்படி அவன் கண்டானா என்பது கவியை காணும் எமக்கு தேவையா? என்பதை நோக்கின், அஃது கவிஞர்களின் வாழ்க்கைக்கும் கவிகளை காணும் உங்கள் வாழ்க்கைக்கும் ஓர் இடைவெளியோ, அல்லது ஓர் நெருக்கமோ தேவையா என்பதை எள்ளளவாவது எடுத்துரைக்கும் அன்றோ.

கவிஞனை பொருத்தவரையில் அவன் சாதாரண மனிதனின் வாழ்க்கையிலிருந்து தள்ளி நிற்கின்றான். அதனால் தான் அவன் கவிஞனாக இருக்கின்றான் சாதாரண மனிதனின் அச்சங்கள், அவலங்கள், அருவருப்புக்கள் அத்தனையையும் அவன் வித்தியாசமான கோணத்தில் நோக்குகின்றான். இவை ஒவ்வொன்றையும் வித்தியாசமாக அவன் ரசிக்கின்றான். ஓர் ஏழைப் பெண் சகதியிலே கால் வைத்து கஷ்டப்பட்டு நடக்கும் அருவருப்பை இவன் ''சேற்றிலே சிலம்புக்கால் வைக்கையிலே சித்திரமாய் தோன்றுதடி'' என்பான்.

இந்நூற்றாண்டில் வாழ்ந்து சொரூபத்தில் மறைந்து விட்ட சொற்களிலே மறையாத கவியரசு கண்ணதாசனையே எடுத்துக்கொள்வோமே. அவன் இல்லற வாழ்க்கையின் போதே தாசிகளின் மடியிலே தாசானு தாசனாய் வாழ்ந்து அவர்களிடமே காமத்தின் கடைசிப்பாகம் வரை படித்தவன் ஆனால் ஒருவனுக்கு ஒருத்தியெனும் உயரிய நாமத்தை அருமையாய் விளக்கியவனும் அவனே. உண்ணும் உணவிலே உறுதியே இல்லாது நாவிற்கேற்ப உண்டவனும் அவன் தான். நாற்பது வயதுக்குப்பின் அது நாயாய் படுத்துவதை அறிவுறுத்தியவனும் அவனே தான். மனதை மதுக்கிண்ணத்திலேயே கரைத்தவனும் அவன்தான் மதுவுண்டவன் மாறும் நிலையை எடுத்துரைத்தவனும் அவன்தான். நாத்திகனாய் ஆடித்திரிந்த அவனால்தான் இயேசு காவியத்தையும், அர்த்தமுள்ள இந்து மதத்தையும் படைக்க முடிந்தது. கவிஞனவன் சேற்றிலே மூழ்கித்தான் செந்தாமரையைப் பற்றிப்பாடுகின்றான். இருளைப்பற்றி அறியாதவன் ஒளியின் அருமையை எப்படி கூறமுடியும். இருளை அனுபவித்தாலன்றி அவன் ஒளியின் உயர்வை உரைக்கமுடியாது. அதே போல் கவிஞன் பாவத்தின் கிடங்கிலே புகுந்து புண்ணியத்தின் பெருமையை பேசுகின்றான் அதில் தவறில்லை.

வாழத்தெரியாதவன் கவிஞன் என்பார்கள் நியாயம் தான் ஆனால் வாழ சொல்லிக்கொடுப்பவனும் கவிஞன்தான். அவன் பாடையிலே போகின்றவனுக்கு பல்லவி சொல்லிக்கொண்டிருப்பான் இதனால் அவனே பாடையில் படுக்க நேருமாயினும் அவன் கவலைப்படுவதில்லை. ஆனால் அடுத்து பாடைக்கு தயாராகுபவனை சிந்திக்க வைக்கின்றான். அவனை பந்தியில் உட்காரவைத்தால் தன் இலையிலுள்ளதை மறந்துவிடுவான் எதிரிலுள்ளவனின் பல்லழகைப் பற்றி பாடிக்கொண்டிருப்பான். இப்படிப்பட்டவனின் வாழ்க்கையில் அவன் நடத்தைகள் உங்களை ஆச்சரியப்பட வைக்கலாம், வெறுப்புறக்கூட வைக்கலாம். ஆனால் அவன் நடத்தைகள் அவனைப் பொறுத்தவரை, கவியுலகை பொறுத்தவரை நியாயம்தான். கவிஞனவன் கட்டிக்கொண்டவளை விட கன்னத்தில் அறைந்தவளை அதிகம் காதலித்தால் அதில் பாவமில்லை கேட்பதற்கு இது கேலியாக இருந்தாலும் இதன் உண்மை மறுக்கமுடியாதது. அவன் வரிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருட்டக்கூடியவள் எவளாயிருப்பினும் அவளிடம் அவன் உள்ளத்தில் அதிக மாக வாழுகின்றான்.

கவிஞனவன் காவியத்தில் நாயகியான பிறகு கவிஞனைப் பொருத்தவரையில் அவள் கற்புக்கரசியாய் இருந்தாலும், நடத்தை தவறியவளாக இருந்தாலும் ஒன்றுதான். அவன் அவள் மீது அக்கறை காட்டத்தான் செய்வான் அவள் பக்கத்திலிருந்து நியாய, அநியாயங்களை நோக்குகின்றான், அவள் உணர்வுகளையும் உள்ளக் குமுறல்களையும் மதிக்கின்றான். அவனால் அவளை நடத்தை கெட்டவளென்று ஒதுக்கிவிடமுடியாது. ஒதுக்கிவிட்டால் காவியம் தான் இயற்ற இயலுமோ? இதேபோல் அவன் காவிய நாயகனாய் ஆனவன் பரதேசியானாலும் சரி, பணக்காரனாக இருந்தாலும் சரி அவனுக்கு ஒன்று தான். இதற்காக அவன் பரதேசியிடம் போவதிலோ, பணக்காரனை பார்ப்பதிலே தவறில்லை. சில சமயம் உங்களுக்கு பணக்காரனிடம் லயிப்பு ஏற்படுவதுபோல் அவனுக்கு பரதேசியின்பால் லயிப்பு ஏற்பட்டால் தவறில்லை. ஏன் எனில் இவன் காவியநாயகன் பரதேசியாயிற்றே உங்களுக்கு உத்தமியிடம் உள்ளன்பு ஏற்பட்டது போல் அவனுக்கு நடத்தைகெட்டவளிடம் உள்ளன்பு ஏற்பட்டால் அதில் பாபமில்லை. ஏனெனில் இவன் காவியநாயகி நடத்தை கெட்டவளாயிற்றே. ''காவியத்தில் நாயகியானால் காரிகை எவளும் கவிஞன் காதலிதான்.''

நீங்கள் கேட்கலாம் அவன் காவியத்தில் உருவாக்கியவளை நேசிக்கட்டும் அதற்காக காலத்தில் சீரழிந்த சகலரிடமும் தஞ்சம் புகுவது முறையோ என்று. கூறுகின்றேன் கேளுங்கள். ஒருதாய் தன் மகனைப்போன்ற ஒருவனை கண்டதும் தன் பிள்ளை அவளுக்கு நினைவு வருகின்றதன்றோ. தன் மகனாக நினைத்து மாற்றானிடம் பரிவுகாட்ட அவளால் இயல்கின்றது. அதில் எப்படி தப்பில்லையோ அதேபோல்தான் கவிஞனும் அவன்படைத்த நாயகியைப்போல் ஒருத்தியை காணுகையில் அவளிடம் தன் காவியநாயகியை தேடுவதில் எந்த தவறுமில்லை.

எனவே கவிஞனவன், வாழ்க்கையில் அவன் மதுவிலே மாண்டாலும் மதுவிலக்கச் சொல்பவன், காதலிப்பவர்களுக்காக காமத்தில் சீரழிந்தவன், பாதாளத்தில் வீழ்ந்தாலும் மற்றவனுக்கு பாதை அமைத்தவன், யாரையோ காப்பாற்ற காரிருளில் மூழ்குபவன் கவிஞன் அவன் வரிகளிலே மற்றவன் வாழ்க்கையை வடிவமைப்பவன் ஆனால் அவன் வாழ்க்கையில் அவனை மட்டும் இருத்திக்கொண்டவன். இதனால் கவிஞனின் வாழ்க்கையைத் தொடரா தீர்கள், அவன் வரிகளைத் தொடருங்கள் கவிஞனை விட்டுவிடுங்கள் அவன் கவிகளை எடுத்துக்கொள்ளுங்கள்.

ஆக்கம்:

**லோ. ரமேஷ்**

ஆண்டு 13 உயிரியற்பிரிவு

பிறன் மனைவியை விரும்புபவர்
மற்றைய பாவங்களைச் செய்பவரைக் காட்டிலும்
அறிவிலிகள் ஆவர்.

- குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் செல்லவுள்ள வழியில் . . .
# நவீன தொழில் நுட்பம்

இன்னும் சில வருடங்களுக்கு பின் உதிக்கப்போவது, இருபத்தியொன்றாம் நூற்றாண்டு. ''தம்பி இருபதாம் நூற்றாண்டே சென்றுவிடு. உன் அண்ணன் இருபத்தியொராம் நூற்றாண்டு எம்மை மகிழ்விப்பான்'' என எதிர்பார்க்கிறது மனித இனம்.

அதேநேரம் அரசியல், பொருளாதார, சமூக சீர்குலைவால் நாம்பட்ட கஷ்டங்களை நினைத்து எதிர்காலத்தில் அக்கறை உடையோர் தொடரும் காலத்தில் பசியும் பஞ்சமும், இல்லா புதியதொரு சோமாலியாவையும், நோயும் நொடியும், கொலையும் கொடுமையும் அல்லாத ஒரு புதியதொரு சமுதாயத்தையும் தொடரும் காலத்தில் உருவாக்குவார்கள் என மனித இனம் எதிர்பார்த்து உள்ளது.

அரசியல்வாதி நிகழ்காலத்தை பற்றியும், தீர்க்கதரிசி எதிர்காலத்தை பற்றியும், புண்பட்டவன் கடந்தகாலத்தை பற்றியும் பேசுவான். இதன்படி எதிர்காலத்தை பற்றி அன்று பேசியவர்கள் அவர்கள் கண்ட கனவு படிப்படியாக நனவாகிவருகிறது. அன்று அவர்கள் வரும் புதிய உலகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைப்பற்றி பல கோணங்களில் ஆழ்ந்து சிந்தித்ததன் பயனாக வறுமையில் சுழன்றுவரும் மனித இனம் மனநிறைவோடும் மகிழ்ச்சி உடனும் வாழ்வதற்குரிய நாட்கள் நெருங்குகின்றன.

தொண்மைக்காலம் முதற்கொண்டே அரசியல், சமுதாய, பொருளாதார மாற்றங்களுக்கு ஆணிவேராய், முதுகெலும்பாய், அடிப்படையாய் அமைந்துவருவது கல்வி ஒன்றுதான். முதலில் சமயக்கல்வியும், பகுத்தறிவு கல்வியும் தோன்றின இடையில் ஆன்மீகமும் பக்தியும் சேர்ந்த நிலையாக உருமாறியுள்ளது. பலவகை உன்னதங்களை செய்துவரும் இந்நாளில் ஒருபடி மேலாக கணணி என்கின்ற நவீனமுறை நடைமுறைபடுத்தலால் எதிர்காலத்தில் கல்வி முறை ஆனது கணணி ஆதிக்கத்தால் நவீனமடைந்து புதுபொலிவு பெறும். இதனால் மனப்பாடம் செய்யும் கல்விமுறை இருக்கவே இருக்காது. மாறாக கணணிகள் வகுப்பறையில் மாணவனுக்குத் தோழனாக இருக்கும்.

தற்போதைய அரசின் இலவச கல்விமுறையின் கீழ் எல்லோரும் கல்விக் கற்கும் சலுகை அதிகரிக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் சுயவேலைவாய்ப்புகள் பெருகும். இதனால் நாட்டின் வளம் பெருகவும் வாய்ப்புகள் உள்ளன.

தொடரும் காலத்திலும் மக்கள் மகிழ்ச்சி ஊட்டும் சூழ்நிலையையே விரும்புவார்கள். அதனால் தற்போது நகரப்பகுதியில் சிறுசிறுவீடாக நெருக்கமாக வாழும் மனிதன் சுகாதாரத்தையும் மன மகிழ்ச்சியையும் நாடி கிராமங்களுக்கு குடிபெயர்வான். அங்கும் அவனுக்கு நகரவசதி முறைகள் கிடைக்கும் என்பதனால்.

கட்டடத்தொழிலில் ஏற்பட்ட நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்தால் கடலுக்கடியிலும் கடல்மேற்பரப்பிலும் ஓட்டல்கள் (Hotel) அமைத்த மனிதன் நாளை சனநெருக்கடியால் இடமின்றி அல்லல்படுவோர்க்கு தக்க பாதுகாப்பு அமைத்து அவர்களை கடலிலும் வீடமைத்து குடியேற்றுவான். பூமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பரப்பில் பனி சூழ்ந்த அண்டார்டிக்கா கண்டமும் ஆட்டிக்கண்டமும் பசுஞ்சோலைகளாகவும் சகாரா பாலைவனம் பசுமை புரட்சி ஏற்படும் இடமாகவும் எதிர்வரும் காலத்தில் மனிதனால் மாறிவிடத்தான் போகின்றன.

தற்போது ''மழை இன்றேல், மின்சாரம் இல்லை'' என்ற முதுமொழியை நீர்மின்சாரம் பறைசாட்டினாலும் சூரியஒளியும் அணுஉலையும் இவ் இடர்பாடான சங்கடத்தில் இருந்து எம்மை மீட்டுவிடும். நவீன தொழிற் புரட்சியின் விளைவாக யாவரின் வீடுகளிலும் ரோபோக்கள் பணிபுரியும். இதனால் மனிதஉழைப்பை பயன்படுத்துவதால் ஏற்படும் பல நோய்களும் மனிதரை நாடாது. தற்போது உலகை அச்சுறுத்தும் எய்ட்ஸ் என்ற எச். ஐ. வி. வைரஸ் நோய் இல்லாதொழிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படும். நவீன மருத்துவ தொழில் நுட்பத்தால் உடலில் வெட்டுகாயங்களும், இரத்த இழப்பும் இன்றி செய்யும் ஆப்ரேசன்களும், டெஸ்ட்டியூப் குழந்தைகளும் மேலும் விரிவடைந்து ஒரு சுகதேகியான மனிதனை தொடரும் காலத்தில் உருவாக்கும்.

விஞ்ஞான பெருக்கம் இவ்வாறான நல்வழியில் எம்மை இட்டு செல்ல இருக்கும் அதேவேளை மூன்றாம் உலகப்போர் மூண்டு மனித இனமே பூண்டோடு அழியும் என்ற கவலை இல்லாது வாழ போட்டி, பொறாமை இன்றி நாடுகளுக்கிடையே பரஸ்பரநல்லுறவை நவீன தொழிநுட்பமே பெற்றுதரும். இதனால் 'யாவரும் மனிதர்கள்' 'யாவரும் எம் சகோதரர்கள்' 'இது எங்கள் உலகம்' என்றதொரு நல்நோக்குடன் ஒவ்வொரு மனிதனும் தொடரும் காலத்தில் வாழ்வான்.

''வளரட்டும் தொழிநுட்பம்
மலரட்டும் -
வரும் எம் வாழ்வில் வசந்தம்''

**சி. சிவஞானசுந்தரம்**
ஆண்டு 13 Bio.

# மழை பார்க்கும் உழவர்

எத்தனை நேரம் துளியே
நாம் காத்திருப்பது
எம் அருகினிலே வரவிடாமல்
உனை யார் தடுப்பது?

மேகத்தை பார்த்து பார்த்து
கண் வழித்தது
உழவர் மனம் தினம்தினம்
உனை நினைத்தது

பார் விழி பூத்திருந்து
வேர்த்திருந்தது - உன்
நில ஒலி கேட்பதற்குக்
காத்திருந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கணக்கில் உலகத்தில்
வெயிலடித்தது! அந்த
மயக்கத்தில் உன் நினைவே
வந்து சேர்ந்தது.

கவிதைப் பூ காத்திருந்து
மனம் உதிர்ந்தது - உன்
மழைச் சத்தம் கேற்பதற்கு
தவம் இருந்தது.

இமைப்பறவை சிறகடித்து
ஓய்ந்து போனது
அந்த கலக்கத்தில் - உழவர்
நாம் எதைநினைப்பது

நிம்மதியாய் தூங்கியது
நின்று போனது! உன்
நினைவாலே எம் மனது
வெந்து போனது.

மழைக்காக எத்தனை நாள்
கண்விழிப்பது? - எம்
கண்ணுக்குள் உன்னாலே
தீ வளர்ந்தது.

எதிர்ப்பார்த்து வந்திருந்து
பாதம் நொந்தது - நீ
பாரினை பார்க்காததனால்
பசி வந்தது

யார்மனதை புண்படுத்த
நீ நினைப்பது? உன்
பிள்ளைகளான எம்மை
எதற்காக தினம் வதைப்பது.

போதுமய்யா மழையே நீ
புலம்பவைப்பது துன்பம்
போர் நடத்தி உழவர் நாம்
எம்மை அழிப்பது.

இத்தனையும் எடுத்துரைத்து
என்ன செய்வது - நீ
ஏமாற்றி வருவதனால்
யாரை நோவது.

N. MOHAN KUMAR
Year 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments from


## MALAKA TRADERS

**Agents For:**

News Papers & Approved Paper Merchants of the National Paper Corporation

**Dealers in:**

School Books, Stationeries & Photo Copying Services

55 - 57 Main Street
Matale

Tele: 066/2126

## MATALE FORAGE CENTRE

*Agents:*

*'PRIMA' LIVESTOCK FEED*

Dealers in Vet. Medicines & Highbrid Chicks

197, Main Street
Matale

Tele: 066-2043

## IRON STEEL COMPANY

General Hardware Merchants & Importers. Dealers in Ceylon Steel Corporation Ltd., Products

*393, Old Moor Street,*
*Colombo - 12.*

Tele: 329011
438903

## Young Collections

*(Quality is our recipe)*

*Dealers in High Quality Imported Textiles*

City Plaza Shopping Complex,
73/G-3, Colombo Street,
KANDY.


எமது விளம்பரதாரர்களை

ஆதரியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி சொல்ல வேண்டும் இவர்களுக்கு . . .

கட்டிக்கரும்பென, சொட்டும் அமுதென, வெட்டும் விழியென, கொட்டும் முரசென, கட்டித் தமிழினைக் காத்திடும் சிட்டுக்குருவிகள் நாம்,

☆ இதயத்தில் இனிதாய் அமர்ந்துவிட்ட எம் பிரதம அதிதி அவர்கட்கும்,

☆ ஆதவனாய் நமக்கு வழிகாட்டும் வண. அதிபர் அவர்கட்கும்,

☆ இனியுதமிழ் வளர்க்க நிகழ்ச்சி படைத்திட்ட ஆசான்கட்கும்,

☆ தங்கம் நிகர் எங்கள் தமிழ் மங்களமாய் விழாக்காண இம்மண்டபத்தை தந்துதவிய புனித ஆசீர்வாதப்பர் சபை அருட்தந்தையருக்கும்,

☆ எங்கள் கலைமதி வளர்ச்சிகாண வாரி வாரி வழங்கிய வள்ளல்கட்கும்,

☆ கலையில் இனிமை சேர்க்கவே ஒளி, ஒலியைத் தந்துதவியவர்கட்கும்,

☆ போட்டிகளில் கலந்து கொண்டு பெருமை சேர்த்த மாணவர்கட்கும்,

☆ கலைநயம் கலந்த அழைப்பிதழை அச்சிட்டுத் தந்த பழையமாணாக்கருக்கும்,

☆ நிகழ்ச்சியின் நிரலை நமக்கென ஆக்கித் தந்த பழையமாணாக்கருக்கும்,

☆ புகைப்படம் பிடித்தே என்றும் எம் நெஞ்சில் நிலைத்துவிட்ட Fine Focus நிறுவனத்தாருக்கும்,

☆ இம்மதியை அச்சில் ஏற்றித் தந்த றோயல் அச்சகத்தாருக்கும்,

☆ மாணாக்கர் கலைத்தாகம் தணிக்கு களமமைத்த பெற்றோருக்கும், பெரியோருக்கும்,

☆ விழாவைச் சிறப்பிக்க உதவிகள் செய்த அனைவருக்கும்,

கன்னக்குழிவிழச் சின்னச்சிரிப்பினில், வண்ண வதனத்தில், இன்முகம் கொண்டே நன்றிகள் கூறுகிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# KARUNANITHY & Co.,

*General Merchants & Commission Agents*

**122, Colombo Street,**
**Kandy.**

☎ 08-22537

'வாழ வேண்டும் எமதினிய தமிழ்
வளர வேண்டும் எமதழகுக்கலை
தொண்டுபுரிய வேண்டும் எமது சமுதாயம்
நிலைத்திருக்க வேண்டும் தமிழ்க் கலாமன்றம்!'

☆ ☆

பலசரக்கு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்
மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஸ்தாபனம்;

## கருணாநிதி அன் கோ.

இல. 122, கொழும்பு வீதி, கண்டி.

தொலைபேசி: 08-22537



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATHARAMPOTHA,
KUNDASALE.

T'PHONE: 08 - 24217, 08 - 32574

Cover & Text Designed & Printed by
ROYAL PRINTERS, 190, COLOMBO STREET, KANDY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org